திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு

உ
செந்திலாண்டவன் துணை

பத்திரகிரியார்
அருளிச்செய்த

# எக்காலக் கண்ணி

[குறிப்புரையுடன்]

*

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்
265-ம் ஆண்டு நினைவுமலர்

*

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படி வெளியிடப்பெற்றது.

*

பதிப்பாசிரியர் :
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.
நிர்வாக ஆசிரியர், "குமரகுருபரன்"
ஸ்ரீவைகுண்டம்

*

உரிமைப்பதிவு ] 31—5—1953 [ விஜய, வைகாசி

முதற் பதிப்பு—1953

திருச்சிராப்பள்ளி யூனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.

உ

செந்திலாண்டவன் துணை

# முகவுரை

—oo—

"வென்றுளே புலன்களைந்தார் மெய்யுணர் உள்ளந் தோறுஞ்
சென்றுளே அமுதம் ஊற்றுந் திருவருள்போற்றி ; ஏற்றுக்
குன்றுளே இருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி ;
மன்றுளே மாறி யாடும் மறைச்சிலம் படிகள் போற்றி"

— திருவிளையாடற் புராணம்

"எக்காலக் கண்ணி" என்ற இச்சிறு நூல் பட்டினத்தடிகளிடம் அருளுபதேசம் பெற்று முற்றுந்துறந்த ஞான சீலராகிய பத்திரகிரியார் இயற்றியதாகும். இஃது இரண்டிரண்டு அடிகள் கொண்ட "கண்ணி" என்ற ஒருவகை இசைப்பாட்டினுல் அமைந்துள்ளது. ஒவ்வொரு கண்ணியின் ஈற்றிலும் "எக்காலம்" என்று முடிவுறுதலின் எக்காலக் கண்ணி எனப் பெயர்பெற்றது போலும். இது 'மெய்ஞ்ஞானப் புலம்பல்' எனவும் வழங்கப்பெறுகின்றது. இந்நூல் 235 – கண்ணிகளைப் பெற்று, வேத சிவாகமத்தின் உட்பொருளைத் தன்னகத்தே அடக்கி மிளிர்வது; தாமரை இலைத் தண்ணீர் போல இல்லறத்தில் பற்றற்று விளங்கும் மெய்யன்பர் முதலியோர் இறையருள் பெற்றுய்யும் வண்ணம் வழிகாட்டுவது. இத்தகைய உயரிய நூல் மக்களுக்குப் பெரும்பயன் அளிக்கும் பொருட்டு, ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அவர்களின் 265-வது ஆண்டு நினைவு மலராக இந்நன்னுளில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் வெளியீடாக வெளிவருகின்றது.

ஸ்ரீ - ல - ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இதுவரை, சைவசமயத்திற்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் ஏனைய பொதுநலப் பணிகளுக்கும் வழங்கியருளிய அருட்கொடைகள் சுமார் 20-லட்சம் ரூபாய்களுக்கு மேலாகும். இன்னும் பற்பல அறங்களுக்காக அளவற்ற பொருளை நாடோறும் வழங்கி வருகின்றுர்கள். இவர்கள் சுவானுபூதிமான்களின் அனுபவப் பயன்களை மக்கள் எளிதிற் பெற்றுப்பயன் அடைந்து

உய்யவேண்டும் என்ற அருள் நோக்கங்கொண்டு இச்சிறு நூலை வெளியிட்டு வழங்க ஆணையருளிய அருளுள்ளத்தினை இந்நானிலம் என்றும் நன்றியுடன் போற்றும் கடப்பாடுடையதாகும்.

இச்சிறு நூல் சென்னை அரசாங்கக் கையெழுத்துப்பிரதி நூல் நிலையத்தின் வெளியீட்டையும், இதுவரை வெளிவந்துள்ள ஏனைய வெளியீடுகளையும் ஒப்பிட்டுச் செப்பம் செய்யப் பெற்றதாகும். ஆங்காங்கே இன்றியமையாப் பாடபேதங்களையும் கொண்டு திகழ்கின்றது. ஒவ்வொரு கண்ணிக்கும் இன்றியமையாக் குறிப்புரை தரப்பெற்றுள்ளது.

ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் என்னும் திங்கள் இதழின் நிரந்தரத் தலைவரும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்து மானேஜிங் டிரஸ்டியாக இருப்பவர்களும், செந்தமிழ் அன்பருமாகிய திரு. T. M. குமாரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள் இந்நூலைச் செவ்விய முறையில் பதிப்பித்துள்ளார்கள். அவர்களுக்குச் செந்திலாண்டவன் திருவருள் நின்று நிலவுவதாகுக.

இச்சிறு நூலுக்கு ஏற்ற முறையில் குறிப்புரையும் ஆசிரியர் வரலாற்றுச் சுருக்கமும் எழுதியுதவிய வித்துவான் திரு. பட்டுச் சாமி ஓதுவார் அவர்கட்கும், பிரதிகளை ஒப்புநோக்குதல் முதலிய பணிகளை நன்முறையில் ஆற்றித் தந்த பனசைச் செந்தமிழ்க் கல்லூரி பிரின்சிபால் வித்துவான் திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L., அவர்கட்கும், திருச்சிராப்பள்ளி வித்துவான் திரு. கோ. இரத்தினம் பிள்ளை அவர்கட்கும் செந்திலாண்டவன் திருவருள் என்றும் முன்னிற்க.

சீரும் சிறப்பும் பொருந்திய இந்நூலுக்கு முகவுரை எழுதும் வாய்ப்பு அடியேற்குக் கிடைத்தது. அதற்குக் காரணராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பொன்னார் திருவடி மலர்களை வந்தித்து வணங்குகின்றேன்.

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்
31—5—'53

இங்ஙனம்,
வித்துவான் மகாலிங்கத் தம்பிரான்
இளவரசு

# பத்திரகிரியார் வரலாறு

—oo—

[வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார், திருச்சி]

**பத்திரகிரியார்** என்னும் பெரியார் கன்னடத்தின் தெற்கே யுள்ள துளுவ நாட்டை, உஞ்சேனை மாகாளம் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு, நீதியுடன் ஆட்சிபுரிந்த மன்னர் ஆவர். இவர் இருவினையொப்பு, மலபரி பாகம், சத்திநிபாதம் கைவரப் பெற்ற அதிதீவிர பக்குவ நிலை பெற்றிருந்தவர். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொடங்கிய மூதறிஞர். ஒரு சமயம் முற்றுந் துறந்த பட்டினத்தடிகள் உஞ்சேனை மாகாள நகரின் புறத்துக் காட்டிலுள்ள விநாயகர் ஆலயத்தில் வந்து நிட்டை கூடி இருந்தனர். அதுபோது அரண்மனையில் கொள்ளைகொண்ட கள்வர்களில் சிலர் தம் எண்ணம் கைகூடியதற்கு மகிழ்ந்து விநாயகப் பெருமானுக்கு ஒரு மணிமாலையை வீசி எறிந்துவிட்டுச் சென்றனர். அம்மணிமாலை நிட்டை கூடியிருந்த அடிகள் கழுத்தில் விழவும், அவர் அதனை அறியாதிருந்தனர்.

பின்னர், காவலர்கள் பட்டினத்தடிகளைக் கள்வரெனக் கருதி அரசன்முன் இழுத்துவரவும் அரசன் ஆராயாது அவரைக் கழுவேற்றுமாறு கட்டளையிட்டான். பட்டினத்தடிகளும் புன்னகையுடன் கழுமரத்தின் அருகுசென்று, "என் செயலாவதியாதொன்று மில்லை" என்ற பாடலைப் பாடவும், கழுமரம் உடனே தீப்பற்றி எரிந்தது. இதனை அறிந்த அரசன் அச்சமுற்று அறிவெய்தி அடிகளிடம் வந்து பணிந்து "குற்றம் பொறுத்தருள வேண்டும்" என்று இரங்க, அடிகள் பத்திரகிரி அரசன்பால் திருவருள் நோக்களித்து "நீ திருவிடைமருதூர்க்கு வருக" எனப் பணித்துச் சென்றனர்.

பத்திரகிரியார் பட்டினத்தடிகளின் கட்டளைப்படி திருவிடைமருதூர்க்கு வந்து ஆங்கே, தம் ஆசிரியரான பட்டினத்தடிகளைத் கீழைக் கோபுரவாயிலிற் கண்டு, பணிந்து துறவு பூண்டு, அவர் கட்டளைப்படி மேலைக் கோபுர வாயிலில் தங்கி, நாடோறும் பிட்சை யேற்றுத் தம் ஞானாசிரியராகிய பட்டினத்தடிகளை உண்பிக்கச் செய்து மிச்சிலைப் புசித்து எஞ்சிய சேடத்தைத் தம்மை யடைந்துள்ள ஒரு பெட்டை நாய்க்கும் இட்டு வருவா

ராஞர். ஒரு நாள் சிவபெருமான் சித்த வேடத்துடன் பட்டினத்தடிகளிடம் சென்று பிட்சைகேட்க, அடிகள் "யாம் கோவணமே பெரும்பாரமாக உடையேம்; மேலைக் கோபுரவாயிலில் உள்ளான் ஒரு சமுசாரி; அவனிடம் செல்க" என்று கூறிஞர். சித்தர் உடனே, பத்திரகிரியாரிடம் வந்து அடிகள் கூறியதைக் கூறி, "நீரேனும் எமக்குப் பிட்சை அளிக்க வேண்டும்" என்றனர்; பத்திரகிரியார் தம் ஆசிரியரின் குறிப்பறிந்து, "இவ்வெச்சில் ஓடும் ஏழை நாயுமோ என்னைச் சமுசாரியாக்கின" என்று அவ்வோட்டினை எடுத்து அந்நாயின் மீது எறிய, அவ்வோடு நாயையும் அடித்துக்கொன்று தானும் உடைந்து சிதறி ஓடியது. உடனே சித்தவேடத்தரும் மறைந்தருளிஞர்.

பின்பு பத்திரகிரியார் "எக்காலக் கண்ணி" என்னும் மெய்ஞ்ஞானப் புலம்பலை இயற்றியும், சிவயோக நிட்டை கூடியும், குருபணி புரிந்தும் வரலாஞர்.

அடியவர் சேடத்தை உண்ட விசேடத்தால் ஓட்டிஞல் அடிபட்டு உயிரிழந்த பெட்டை நாய் காசிராசன் மகளாகப் பிறந்து வளர்ந்து மங்கைப் பருவமுற்றுப் பூர்வ புண்ணியத்தால் தன் தந்தையின் துணைகொண்டு, பத்திரகிரியாரை அடைய, அவர் நிட்டை கலைந்து நோக்குதலும், அவ்வரசன் மகள் குருநாதரை வணங்கி, "எம்பெருமானே! அடிநாய் மீண்டும் தங்கள் திருவடியை நாடிச் சார்ந்தது" எனக்கூறி நின்றனள். உடனே அவர் எழுந்து அப்பெண்ணின் கரத்தைப் பற்றிக்கொண்டு, தம் ஆசிரியரிடம் அழைத்துப்போய், "தங்கள் மிச்சிலை உண்ட இவட்கும் இப்பிறவித்துன்பம் வரலாமோ?" என்று வேண்ட, அவர் திருவருளை நாட, அப்போது மகாலிங்கத்தினின்றும் ஒரு பெருஞ்சோதி தோன்றியது. அச்சோதியுள் பத்திரகிரியார் அப்பெண்ணுடன் புகுந்து கலந்தருளிஞர்.

இவர் முத்தியடைந்த நாள் சித்திரைத் திங்கள் மக நட்சத்திரம் ஆகும் என்பர்.

பத்திரகிரியார் பட்டினத்தடிகளின் காலமாகிய கி. பி. 10-ம் நூற்றுண்டின் இறுதியில் விளங்கியவர் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு.

உ

சிவ சிவ

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு

—o—

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீவைகுண்டத்தில் அவதரித்தார்; திருச்செந்தூர் முருகப் பெருமான் அருளால் ஐந்து ஆண்டில் ஊமை நீங்கிக் 'கந்தர் கலி வெண்பா' பாடி அருள் பெற்ருர்; மதுரை மீனுட்சியம்மைமீது 'பிள்ளைத் தமிழ்' பாடி அம்மையால் முத்தாரம் அணியப் பெற்ருர்; திருமலை நாயக்க மன்னன் விருப்பத்திற்கு இணங்க "நீதிநெறி விளக்கம்" என்னும் நூலை அருளினுர்; தருமை ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டுப் 'பண்டார மும்மணிக் கோவை' பகர்ந்தார்; ஆரூர், வேளூர், தில்லை தரிசித்து, மாலை, கோவை முதலியன பாடினுர்; காசி சென்று 'சகல கலா வல்லி மாலை', 'காசிக்கலம்பகம்' முதலியன அருளினுர்; சிங்கத்தின் மீதேறிச் சென்று முகலாய மன்னனைக்கண்டு அவன் உதவியால் கேதார மந்திரம், கேதாரத்துறை, அறச்சாலை முதலியன அமைத்தார்; வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியோருக்கு வித்தியா குருவாகத் திகழ்ந்தார்.

இச்செயற்கரிய செயல்கள் புரிந்த முனிவர் பெருமானின் நினைவு உலகுக்கு நன்னெறி காட்டி இன்பந்தருவதாகும்.

இவர் காலம் கி. பி. 17-ம் நூற்ருண்டின் முற்பகுதி ஆகும்.

உ

சிவ சிவ

# பத்திரகிரியார்

# பெருமை

—o—

"ஒட்டுடன்பற் றின்றி உலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ"

— தாயுமான சுவாமிகள்

உ

செந்திலாண்டவன் துணை

**பத்திரகிரியார்**

அருளிச்செய்த

# எக்காலக் கண்ணி*

—— oo ——

**காப்பு**

முத்திதரும் [1]வேத மொழிந்தமெய்ஞ்ஞா னஞ்சொல்ல
அத்தி முகவன்தன் அருள்பெறுவ தெக்காலம்? 1

அஞ்சு கரத்தானின் அடியிணையைப் போற்றிசெய்து
நெஞ்சிற் [2]பொருத்தி நிலைபெறுவ தெக்காலம்? 2

**நூல்**

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்? 3

நீங்காச் சிவயோக நித்திரை கொண் டேயிருந்து
தேங்காக் கருணை[3]வெள்ளந் தேக்குவ தெக்காலம்? 4

தேங்காக் கருணைவெள்ளந் [4]தேக்கியிருந் துண்பதற்கு
வாங்காமல் விட்டகுறை வந்தடுப்ப தெக்காலம்? 5

---

* இது 'மெய்ஞ்ஞானப் புலம்பல்' எனவும் வழங்கப் பெறுகின்றது.

1. முத்திதரும்-பக்குவான் மாக்கள் மோட்சம் அடைதற்கு ஏதுவான. மெய்ஞ்ஞானம் - உண்மைஞானம். அத்திமுகவன் - விநாயகக் கடவுள்.

2. அஞ்சு கரத்தாள்-விநாயகக்கடவுள். அடியிணை-இச்சாசத்தி கிரியா சத்தி என்ற இரண்டு திருவடிகள்.

3. ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன். சுட்டறுத்து - அடக்கி. தூங்காமல் தூங்கல் - யோகநித்திரை.

4. சிவயோகநித்திரை – சிவராஜயோக சமாதி. கருணைவெள்ளம் - சிவானந்தவெள்ளம்.

5. உண்பதற்கு - அனுபவித்தற்கு. விட்டகுறை - பூர்வபுண்ணியம்.

பாடபேதம்: 1. ஞான மொழியாம் புலம்பல் சொல்ல. 2. பொருந்தி. 3. வெள்ளஞ் சேருவதும். 4. தேங்கியிருந் துண்பவர்க்கு

ஓயாக் கவலையினால் [1]உள்ளுடைந்து வாடாமல்
மாயாப் பிறவி மயக்கறுப்ப தெக்காலம்? 6

மாயாப் பிறவி மயக்கத்தை யூடறுத்துக்
காயா புரிக்கோட்டை கைக்கொள்வ தெக்காலம்? 7

காயா புரிக்கோட்டை கைவசமாய்க் கொள்வதற்கு
மாயா அனுபூதி வந்தடைவ தெக்காலம்? 8

சேயாய்ச் சமைந்து செவிடூமை போல்திரிந்து
பேய்போல் இருந்துன் பிரமைகொள்வ தெக்காலம்? 9

பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்துபெண்ணைத்
தாய்போல் நினைத்துத் தவமுடிப்ப தெக்காலம்? 10

கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள்முகந் தான்காட்டி
மால்காட்டும் மங்கையரை மறந்திருப்ப தெக்காலம்? 11

பெண்ணின்நல் லார்ஆசைப் பிரமைதனை விட்டொழிந்தென்
கண்ணிரண்டும் மூடிக் [2]கலந்திருப்ப தெக்காலம்? 12

வெட்டுண்ட புண்போல் விரிந்த அல்குற் பைதனிலே
[3]கட்டுண்டு நில்லாமல் கருதுவது மெக்காலம்? 13

ஆறுத புண்ணில் அழுந்திக் கிடவாமல்
தேறுத சிந்தைதனைத் தேற்றுவது மெக்காலம்? 14

---

6. கவலை - உலகத்துன்பம். உள்உடைந்து - மனந்தளர்ந்து. மாயாப் பிறவி - மாயா காரியத்தால் உண்டாகும் பிறவி.

7. காயாபுரிக்கோட்டை - உடலாகிய கோட்டை (நிலைபெற). கைக்கொள்வது - காயசித்தியடைவது.

8. மாயா - அழியாத. அனுபூதி - சிவானுபூதி.

9. சேய் - புதல்வன். சமைந்து - பிறந்து. பிரமை கொள்வது - திருவருட்காட்சியினைப் பெறுவது.

10. பிணம் - நடைப்பிணம். கிடந்து—சஞ்சரித்து. தவம் - சிவயோகம்.

11. மால்காட்டும்-காமமயக்கத்தினையுண்டாக்கும். மங்கையர் - மாதர்.

12. ஆசைப்பிரமை - ஆசைப்பயித்தியம். கலந்திருப்பது - திருவருளில் கலந்து அனுபவிப்பது.

13. வெட்டுண்ட - பிளவுபட்ட. அல்குற்பை - பெண்குறி. கட்டுண்டு- மயங்கி. கருதுவது - திருவருளை நினைப்பது.

14. ஆறுதபுண் - பெண்குறி; காமக்குழி. தேறுத - உண்மைப் பயனை ஆராயாத. தேற்றுவது - சற்சங்கப் பயிற்சியில் ஈடுபடுத்துவது.

1. உள்ளிருந்து. 2. கவிழ்ந்திருப்ப. 3. தட்டுண்டு நிற்கை கவிர்வதுவு.

தந்தைதாய் மக்களும் சகோதரமும் பொய்யெனவே
சிந்தைதனிற் கண்டு [1]தெளிந்திருப்ப தெக்காலம்? 15

மன்னுயிரைக் கொன்று [2]வதைத்துண் டுழலாமல்
தன்னுயிர்போல் எண்ணித் தவமுடிப்ப தெக்காலம்? 16

பாவியென்று பேர்படைத்துப் பாழ்நரகில் வீழாமல்
ஆவிநின்ற சூத்திரத்தை [3]அறிவதினி யெக்காலம்? 17

உளியிட்ட கல்லும் உருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்ட [4]செம்பும் [5]பொருள்தெரிவ தெக்காலம்? 18

வேடிக்கை யுஞ்சொகுசும் மெய்ப்பகட்டும் பொய்ப்பகட்டும்
வாடிக்கை யெல்லாம் [6]மறந்திருப்ப தெக்காலம்? 19

பட்டுடையும் [7]ஒப்பனையும் [8]பாவனையும் தீவினையும்
விட்டுவிட்(டு) உன்பாதம் விரும்புவது மெக்காலம்? 20

ஆமைவரும் ஆட்கண்(டு) ஐந்தடக்கஞ் செய்தாற்போல்
ஊமை யுருக்கொண்(டு) ஒடுங்குவது மெக்காலம்? 21

தண்டிகையுஞ் சாவடியுஞ் சாளிகையும் [9]மாளிகையுங்
கண்டு [10]களிக்குங் கருத்தொழிவ தெக்காலம்? 22

---

15. பொய் - இங்கு மாயா சாலம். தெளிந்திருப்பது - (உண்மையினை ஆராய்ந்து) தெளிந்து சிவயோகத்தில் இருப்பது.

16. மன்னுயிர் - சீவராசிகள். வதைத்துக்கொன்று - அழித்து. தவம் - இங்குக் கொல்லா விரதம்.

17. பாவி - இது பழிக்கத்தக்க செயல்களைச் செய்வதால் பெறுவது. ஆவி நின்ற சூத்திரம் - உயிர் உடலில் தங்கிநிற்கும் இரகசியம்.

18. உளியிட்ட - உளியினால் செதுக்கப்பெற்ற. சாந்து - சுண்ணம்பு. பொருள் - (ஆகிய இவற்றுள் விளங்கும்) உண்மை.

19. சொகுசு - சௌக்கியம். மெய்ப்பகட்டு - உடலலங்காரம். வாடிக்கை - வழக்கம்.

20. ஒப்பனை - அலங்காரம். பாவனை - பிறரைப்போன்று நடித்தல்.

21. வரும் ஆள் - தன்னிடம் வருகின்றமனிதரை. ஐந்தடக்கம் - ஐந்து உறுப்புக்களை உள்ளடக்குதல். ஊமை உரு - மௌனநிலை. ஒடுங்குவது - பஞ்சேந்திரியங்களை ஒடுங்கச் செய்வது.

22. தண்டிகை - பல்லக்கு. சாவடி - சத்திரம். சாளிகை - பணப்பை.

1. திருக்கறுப்ப. 2. வதைத்துயிரைப் பார்க்காமல். 3. அடைவதினி. 4. செம்பதுபோல். 5. பொருளாவ. 6. மயக்கறுப்ப. 7. பொற்பணியும். 8. பாவினையும். 9. மாலிகையும். 10. களித்து கருத்தில் வைப்ப.

அத்தன் இருக்குமிடம் ஆராய்ந்து பார்த்துநிதம்
செத்த சவம்போலே திரிவதினி யெக்காலம்? 23

[1]உள்ளே கருத்தைவைத்(து) உள்ளெலும்பு வெள்ளெலும்பாய்க்
[2]கள்ளிப்பிணம் போலிருந்து காண்பதினி யெக்காலம்? 24

அற்பசுகம் [3]மறந்தே அறிவைஅறி வால்[4]அறிந்து
கெற்பத்தில் வீழ்ந்து[5]கொண்ட கேடறுப்ப தெக்காலம்? 25

கருப்படுத்தி என்னையமன் கைப்பிடித்துக் கொள்ளாமுன்
உருப்படுத்தி ஆண்டருள உடன்படுவ தெக்காலம்? 26

தூண்டு விளக்கணைய தொடர்ந்திருள் சூழ்ந்தாற்போல்
மாண்டு பிழைத்துவந்த வகைதெரிவ தெக்காலம்? 27

தூரியில் மீனம்போல் சுழன்றுமனம் வாடாமல்
ஆரியனைத் தேடி அடிபணிவ தெக்காலம்? 28

எண்ணூ(று) உகமிருந்தும் எய்தாத வீடுபெற
வெண்ணீறு பூசி விளங்குவது மெக்காலம்? 29

அவவேடம் பூண்டிங்(கு) அலைந்து [6]திரியாமல்
சிவவேடம் பூண்டு சிறந்திருப்ப தெக்காலம்? 30

அண்டருக்கா நஞ்சருந்தி அம்பலத்தில் ஆடுசிவன்
தொண்டருக்குத் தொண்டனெனத் தொண்டுசெய்வ தெக்காலம்? 31

---

23. அத்தன் - சிவபெருமான். ஆராய்ந்து - சாத்திர ஆராய்ச்சி செய்து. செத்தசவம் - இது பற்றற்ற நிலையினைக்குறிப்பது.

24. உள்ளே கருத்தை வைத்து - சிவத்தியானஞ் செய்து. உள்எலும்பு - உடலிலுள்ள என்பு. கள்ளி - விறகு.

25. அற்பசுகம் - சிற்றின்பம். அறிவை - (இறைவன்) திருவருளை.

26. கருப்படுத்தி - (பரமனால்) படைக்கப் பெற்று. (நாள் உலகில் வாழுங்கால்) உருப்படுத்தி - சிவமாந்தன்மை செய்து.

27. அணைய - அவிய. வகை - உண்மை.

28. தூரி - பெருவலை. சுழன்று - (உலகில்) அலைந்து. ஆரியன் - குரு.

29. எண்ணூறு உகம் இருந்து - (விபூதி அணியாமல்) பலகாலம் வாழ்ந்திருந்தபோதிலும். பெற - உடனே பெற.

30. அவவேடம் - பொய்வேடம். அலைந்து - (மூவாசை கொண்டு வீணே) அலைந்து.

31. அண்டர் - தேவர். நஞ்சு - விஷம். தொண்டு - அடிமைத்தொழில்.

1. ஒழிந்த தருமத்தை. 2. கழிந்த பிணம். 3. அறிந்து. 4. மறந்து. 5. கொண்டு, கொண்டே. 6. திரியாமல்யான்.

பன்றி வடிவெடுத்துப் பாரிடந்த மால்காணுக்
குன்றில் விளக்கொளியைக் [1]கூடுவது மெக்காலம்? 32

தித்திக்குந் தெள்ளமுதைச் சித்தாந்தத் துட்பொருளை
முத்திக்கு வித்தை முதல்நினைப்ப தெக்காலம்? 33

வேதாந்த வேதமெல்லாம் [2]விட்டொழிந்து நிட்டையினால்
ஏகாந்த மாகி இருப்பதினி யெக்காலம்? 34

மற்றிடத்தைத் தேடி வாழ்நாளைப் போக்காமல்
உற்றிடத்தைத் தேடி உறங்குவது மெக்காலம்? 35

இன்றுளோர் நாளை இருப்பதுவும் பொய்யெனவே
மன்றுளோர் சொல்லும் வகையறிவ தெக்காலம்? 36

கஞ்சா அபினியுடன் கள்ளுண்டு வாடாமல்
பஞ்சா மிருதவின்பம் பருகுவது மெக்காலம்? 37

செஞ்சலத்தி னால்திரண்ட செனனமோட்சம் பெறவே
சஞ்சலத்தை விட்டுன் சரணடைவ தெக்காலம்? 38

கும்பிக் கிரைதேடிக் கொடுப்பார் இடந்தோறும்
வெம்பித் திரிகை விடுப்பதினி யெக்காலம்? 39

ஆடுகின்ற சூத்திரந்தான் [3]அறுமளவு மேதிரிந்து
போடுகின்ற நாள்வருமுன் போற்றுவது மெக்காலம்? 40

---

32. பார் இடந்த - பூமியினைத் தோண்டிய. குன்றில் விளக்கொளியை - சோதிமயமான திருவண்ணமலை என்னும் தலத்துச் சிவனை (தினைத்து).

33. தெள்ளமுது - தேவாமிர்தம். முதல் - (யாவரினும்) முதலாக.

34. நிட்டையினால் - (சிவாகமத்தில் கூறிய) சிவயோக நிட்டையினால். ஏகாந்தம் - தனித்திருத்தல்.

35. மற்ற: அசை. இடம் - நிலம், வீடு, தோட்டங்கள். உள்ளிடம் - ஆன்ம விசாரணை.

36. இன்றுளார் - இன்றிருப்பவர். மன்றுளோர் - பெரியோர். வகை - உண்மை வகைகளை.

37. வாடாமல் - கெடாமல். பஞ்சாமிர்தம் - (தெவிட்டாத) சிவானந்த அமிர்தம்.

38. செஞ்சலம் - (தாயின் கருப்பாசய) இரத்தம். சஞ்சலம் - குடும்பத் துக்கம்.

39. கும்பி - வயிறு. இரை - உணவு. வெம்பி - மனம்புழுங்கி.

40. ஆடுகின்ற - (உலகத்தில்) உலவித்திரிகின்ற. சூத்திரம் - தேகம். போடுகின்ற நாள் - அழியும் நாள்.

1. கூறுவது 2. விட்டொழிந்தேன் இச்சையினால். 3. ஆமளவு.

[1]நவசூத் திரவீட்டை [2]நானலநீ வென்றிருந்த
சிவசூத் திரத்தைத் தெளிந்தறிவ தெக்காலம்? 41

இம்மைதனில் பாதகனாய் இருவினைக்கீ டாயெடுத்த
பொய்ம்மைதனைப் போட்டுனடி போற்றிநிற்ப தெக்காலம்? 42

உப்பிட்ட பாண்டமது உடைந்துகருக் கொள்ளுமுன்னே
அப்பிட்ட வேணியனுக்(கு) ஆட்படுவ தெக்காலம்? 43

சேவை தினம்புரிந்து சிவரூபக் காட்சிகண்டு
பாவைதனைக் கழித்துப் [3]பரமடைவ தெக்காலம்? 44

[4]பரந்துமல சலங்கள் [5]பாயும்புழுக் கூட்டைவிட்டுக்
கரந்துன் னடிக்கீழ்க் கலந்துநிற்ப தெக்காலம்? 45

சோற்றுத் துருத்திதனைச் சுமந்தலைந்து வாடாமல்
ஊத்தைச் சடம்போட்(டு) உனையடைவ தெக்காலம்? 46

துடக்கைச் சதமெனவே சுமந்தலுத்துப் போகாமல்
இடக்கைக் கழற்றியுனை இனியடைவ தெக்காலம்? 47

ஆசைவலைப் பாசமதில் அகப்பட்டு மாளாமல்
ஓசை[6]மணித் தீபமதில் ஒன்றிநிற்ப தெக்காலம்? 48

---

**41.** நவசூத்திர வீட்டை - நவத்துவாரங்கள் பொருந்திய உடலின் மீது (வைத்துள்ள). நான் என்று - நான் என்ற அபிமானங்கொண்டு. சிவசூத்திரம் - சிவஞானபோத சூத்திரம் என்ற நூலின் (உண்மைப் பொருளை).

**42.** இம்மை - இப்பிறவி. பாதகனாய் - பாவச்செயலைச் செய்தவனாய். இருவினை - நல்வினை தீவினை. பொய்ம்மை - பொய்யாகிய உடல்.

**43.** உப்பு இட்ட - உப்பு இருந்த. பாண்டம் - பாத்திரத்தை ஒத்த உடல். அப்பிட்டவேணியன் - கங்கையைத் தரித்த சிவபெருமான்.

**44.** சேவை - ஆலயவழிபாடு. பாவைதனைக் கழித்து - பெண்ணாசை ஒழித்து. பரம் - முத்தி.

**45.** பாயும் - கழியும். புழுக்கூடு - புழுக்கள் நிறைந்த உடல். கரந்து - நீங்கி. அடிக்கீழ்க்கலந்து நிற்றல் - இரண்டறக் கலத்தல்; மோட்சம்.

**46.** சோற்றுத் துருத்தி - உடல். அலைந்து-வருந்தி. ஊத்தைச்சடம் - நாற்றம் பொருந்திய உடல்.

**47.** துடக்கு - உடல். சதம் - எப்பொழுதும் நிலைத்தது. இடக்கை - (இல்வாழ்க்கைத்) தொந்தரவுகளை.

**48.** ஆசைப் பாசவலை - உலக ஆசையாகிய மாய வலையில். பாசம் - பற்று. ஓசை - நாதத்த்துவத்தில் (தோன்றும்). மணித்தீபம - சோதி.

**1.** நவசூத்திரம்போட்டு. **2.** நானல; நானென்றலையாமல். **3.** பயனடைவ. **4.** மறந்துமல. **5.** மாயும்புழுக். **6.** மலர்த்.

[1]குரல்நெரிய நால்வேதங் கூப்பிட்டுங் காணாத
[2]பரமரக சியத்தைப் பார்த்திருப்ப தெக்காலம்? 49

புல்லாய் விலங்காய் புழுவாய் நரவடிவாய்
எல்லாப் பிறப்பின் இருளகல்வ தெக்காலம்? 50

கல்லாய் மரமாய்க் கயலாய்ப் பறவையாய்ப்
புல்லாய்ப் [3]பிறந்தசன்மம் [4]போதுமென்ப தெக்காலம்? 51

தக்கவகைக் கோர்[5]பொருளும் சாராம லேநினைவில்
பக்குவமாய் நின்னருளைப் பார்த்திருப்ப தெக்காலம்? 52

புருவைத் தலைவரோடு புல்கியின்பங் கொள்வதற்குத்
தெரிவைப் பருவம்வந்து சிக்குவது மெக்காலம்? 53

தெரிவையுறும் பக்குவத்தின் சீராட்டெல் லாமறிந்து
குருவைஅறி வால்நினைத்துக் கும்பிடுவ தெக்காலம்? 54

வம்படிக்கும் மாதருடன் [6]வாழ்ந்தாலும் மன்னுபுளி
[7]யம்பழமும் ஓடும்போல் ஆவதினி யெக்காலம்? 55

பற்றற்று நீரிற் படர்ந்தவண்ணச் சிற்றிலைபோல்
சுற்றத்தை நீக்கிமனந் தூரநிற்ப தெக்காலம்? 56

---

49. குரல் - தொண்டை. கூப்பிட்டு - கூவி முறையிட்டும். பரமரக சியம் - மேலான உண்மைப்பொருள்.

50. நரவடிவு - மனிதவடிவு. இருள் - ஆணவமலம்.

51. கயல் - மீன். புல்லாய் - புன்மையாய்; இழிவாய். பிறந்த சென்மம் - எடுத்தபிறவி.

52. தக்க வகைக்கு - திருவருள் கிடைக்கும் வகையில். நினைவில் - இங்கு மனத்தில்.

53. புருவை - இளமை. புல்கி - கலந்து. தெரிவைப் பருவம் - பெண்ணின் பருவம் போன்ற பரிபக்குவ வயது. சிக்குவது - அடைவது.

54. தெரிவை - பெண். பக்குவம் - இன்பம் நுகரும் வயது. அறிந்து - தெரிந்து (அனுபவிப்பதுபோல). அறிவால் - நூலறிவால் (ஆராய்ந்து அறிந்து).

55. வம்பு - வீண் சண்டை. புளியம்பழமும் ஓடும்போல் ஆவது - இது பற்றற்ற நிலையினைக்குறிப்பது.

56. நீரிற் படர்ந்த வண்ணச் சிற்றிலைபோல்-தாமரையிலையில் தண்ணீர் இருந்தும் பற்றிக் கொள்ளாத தன்மையைப் போல.

1. கூரிய. 2. பாரரக. 3. பிறசனனம். 4. போக்குவ. 5. நினைவுஞ். 6. மண்ணுலகில் வாழ்ந்தாலும் புளி. 7. யம்பழத்தோடுபோல் நிருப்பதும்.

சல்லாப லீலையிலே தன்மனைவி செய்தசுகம்
சொல்லாரக் கண்டெனக்குச் செல்வதினி யெக்காலம்? 57

மருவ அயற்புருடன் வருநேரங் காணாமல்
உருகுமனம் போலெனுளம் உருகுவது மெக்காலம்? 58

தன்கணவன் தன்சுகத்தில் தன்மனம்வே றானதுபோல
என்கருத்தில் உன்பதத்தை ஏத்துவது மெக்காலம்? 59

கூடிப் பிரிந்துவிட்ட கொம்பனையைக் காணாமல்
தேடித் தவிப்பவன்போல் சிந்தை[1]செய்வ தெக்காலம்? 60

எவ்வனப் பெண்மோகம் எப்படியுண் டப்படிப் போல்
கவ்வனத்தில் உன்னைக் கலந்திருப்ப தெக்காலம்? 61

கண்ணால் அருவி கசிந்துநின்று முத்துதிரச்
சொன்ன பரம்பொருளைத் தொகுத்தறிவ தெக்காலம்? 62

ஆகமிக வுருக [2]அன்புருக என்புருக
[3]யோகவனு பூதிசிந்தை உகந்திருப்ப தெக்காலம்? 63

நீரிற் குமிழிபோல் [4]நிலையற்ற வாழ்வைவிட்டுன்
பேரிற் கருணைவெள்ளப் பெருக்கெடுப்ப தெக்காலம்? 64

அன்புதனை யுருக்கி அறிவையதன் மேற்புகட்டித்
துன்பவலைப் பாசத் துடக்கறுப்ப தெக்காலம்? 65

---

57. சல்லாபலீலை - இன்பப்பேச்சுடன் கூடிய கலவி. மனைவி - மனையாளிடத்து. செய்த சுகம் - அடைந்த சுகத்தைப் போன்று. சொல்லார - திருவருட் சுகத்தின் நுட்பத்தை.

58. மருவ - தழுவ. என் உளம் -(தேவரீரிடத்து) என்னுடைய மனம்.

59. தன்மனம் வேறானதுபோல் - வேறு நாயகனிடம் சென்ற மனம் போல. என்கருத்தில் - உலகச் சுகத்தில் இருக்கின்ற என் மனத்தில்.

60. கொம்பனையை - மனைவியை. சிந்தைவைப்பது - (தேவரீரிடத்து) மனத்தைப் பதியவைத்துத்தியானிப்பது.

61. எவ்வனம் - இளமை. கவ்வனத்தில் - கவனத்துடன் கூடிய. தியானத்தில்.

62. அருவி - ஆனந்தக் கண்ணீர். சொன்ன - (ஆகமநூல்) கூறிய.

63. ஆகம் - உடல். யோகவனுபூதி - யோகத் தியானத்தில்.

64. வாழ்வு - உலகவாழ்க்கை. உன்பேரில் - தேவரீரிடமுள்ள. பெருக்கு எடுப்பது - (அடியேன்மீது) ததும்பிவழிவது.

65. உருக்கி - பெருக்கி. துன்பவலை - துன்பமாகிய வலையில் (அகப்பட்ட). பாசம் - மூவகைப்பற்றின். துடக்கு - கட்டு,

1. வைப்ப. 2. அகமுருக. 3. போக வனுபூதி பொருந்துவதும். 4. நிசமுற்ற.

[1]கருணை வழியறிந்து கருத்தைச் [2]செலுத்தி
அருவிவிழி சொரிய அன்புவைப்ப தெக்காலம்? 66

தெளியத் [3]தெளியத் தெளிந்தசிவா னந்தத்தேன்
பொழியப் பொழியமனம் பூண்டிருப்ப தெக்காலம்? 67

ஆதார மூலத் தடியிற் கணபதியைப்
பாதார விந்தம் பணிந்துநிற்ப தெக்காலம்? 68

மண்வளைந்த [4]நாற்கீற்றில் வளைந்திருந்த வேதாவைக்
கண்வளைந்து பார்த்துள்ளே கண்டிருப்ப தெக்காலம்? 69

அப்புப் பிறைநடுவே அமைந்திருந்த விட்டுணுவை
உப்புக் குடுக்கையுள்ளே [5]உணர்ந்தறிவ தெக்காலம்? 70

மூன்று வளையமிட்டு முளைத்தெழுந்த [6]கோணத்தில்
தோன்றும் உருத்திரனைத் தொழுதுநிற்ப தெக்காலம்? 71

வாயுஅறு கோணமதில் வாழு மகேசுரனைத்
தோயும்வகை கேட்கத் தொடங்குவது மெக்காலம்? 72

வட்ட [7]விழிக்குள்ளே மருவுஞ் சதாசிவத்தைக்
கிட்டவழி தேடக் கிருபைசெய்வ தெக்காலம்? 73

---

66. கருணை - திருவருட் கருணையின். அருவி விழி - கண்ணருவி.

67. தெளியத் தெளியத் தெளிந்த - மிகமிகத் தெளிவுற்ற. பூண்டிருப்பது – சுகித்திருப்பது.

68. ஆதார மூலத் தடியில் - முக்கோணவடிவாகிய மூலாதாரத்தில் எழுந்தருளிய. பாதாரவிந்தம் - திருவடித்தாமரைகளை.

69. மண் வளைந்த - மண்ணின் நிறமான பொன்னிறம் சூழ்ந்த. நாற்கீற்றில் - நாற்கோணவடிவாகிய சுவாதிட்டானத்தில். வேதாவை- பிரமனை.

70. அப்புப்பிறை - குளிர்ந்த மூன்றாம் பிறைச்சந்திரன் வடிவாகிய மணிபூரகத்தில். உப்புக் குடுக்கையுள்ளே - உப்பிருந்த பாண்டம்போன்ற உடலுக்குள்ளே.

71. கோணத்தில் - முக்கோணவடிவில் (அனாகதத்தில்). தோன்றும் - அக்கினி நிறத்துடன் காணப்படும்.

72. வாயு - வாயுவின் (தானமான). அறுகோணமதில் - அறுகோண வடிவுள்ள விசுத்தியில்.

73. வட்ட விழிக்குள்ளே - லலாடபீடத்தில் வட்டவடிவாக விளங்கும் ஆஞ்ஞையில். கிட்ட - அடைய. வழிதேட - வழி அறிய.

1. கருவின். 2. செலுத்தாமல். 3. தெளியமிகச் சித்தாந்தந் தன்னிலன்பு. 4. நாச்சதிரில். 5. உகந்தறிவ 6. வெண்ணெருப்பில். 7. வழிக்குள்ளே.

உச்சிக் கிடைநடுவே ஓங்கு குருபதத்தை
[1]நிச்சயித்துக் கொண்டிருந்து நேர்வதினி யெக்காலம்? 74

பாராகிப் பார்மீதில் பஞ்சவர்ணம் தானாகி
வேராகி நீமுளைத்த வித்தறிவ தெக்காலம்? 75

கட்டறுக்க வொண்ணாக் கருவிகர ணாதியெல்லாஞ்
சுட்டறுத்து நிட்டையிலே தூங்குவது மெக்காலம்? 76

கள்ளக் கருத்தையெல்லாங் கட்டோடு வேரறுத்திங்(கு)
உள்ளக் கருத்தை உணர்ந்திருப்ப தெக்காலம்? 77

[2]தூரோ டிசைந்து சுழன்றுவரும் தத்துவத்தை
வேரோ டறுத்து விளங்குவது மெக்காலம்? 78

அட்டகா சஞ்செலுத்தும் அவத்தைச் [3]சடத்துடனே
பட்டபா டத்தனையும் பகுத்தறிவ தெக்காலம்? 79

அறிவுக் [4]கருவியுடன் அவத்தைபடும் பாட்டையெல்லாம்
பிறிவுபட நிறுத்திப் பெலப்படுவ தெக்காலம்? 80

பூதம் பொறிகரணம் போந்தவிந்து நாதமுமாய்ப்
பேதம் பலவிதமும் பிரித்தறிவ தெக்காலம்? 81

---

74. உச்சிக்கிடை நடுவே ஓங்கு குருபதத்தை - துவாத சாந்த நிலையை. குரு - நிறம்; ஒளி.

75. பார்மீதில் பாராகி - பூமியிலும் (தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றிலும்) முறையே. பஞ்சவர்ணம் - பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, பசுமை. வேர் - மூலம். வித்து - விதம்; தன்மை.

76. கட்டு அறுக்க - பிரித்து அறிய. கருவி - புறக்கருவி. கரணம் - அந்தக் கரணங்கள். சுட்டறுத்து - சேட்டைகளை ஒடுக்கி.

77. கள்ளக்கருத்து - வஞ்சகம் நிறைந்த எண்ணம். உள்ளக் கருத்தை - அழியாத பொருளை.

78. தூரோடு இசைந்து - உலகவாழ்க்கையாகிய சேற்றில் அழுந்தி.

79. அட்டகாசம் - (வீண்) ஆடம்பரத்துடன் கூடிய மகிழ்ச்சி. அவத்தை - துன்பம். சடம் – உடல்.

80. அறிவுக் கருவியுடன் - அறிவு பெறுதற்கு ஏதுவான தத்துவத்துடன். பிறிவு - பிரிவு. பெலம் - பலம்.

81. பூதம் - ஐம்பூதம். கரணம் - மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என்னும் அந்தக் கரணங்கள். பேதம் - பேதப்பட்ட.

1. இச்சித்துக் கொண்டிருக்க இனிக்காண்பது. 2. தூரோ டசைத்துச் சுழன்றுநின்ற. 3. தவத்துடனே. 4. குவியுடனே.

தோன்முசை மூன்றுந் தொடர்ந்துவந்து சுற்முமல்
ஊன்முசை வேரையடி யூடறுப்ப தெக்காலம்? 82

புன்சனனம் [1]பொன்றுமுன்னே புரியட்ட கம்போகில்
என்சனனம் ஈடேறும் என்றறிவ தெக்காலம்? 83

நட்ட நடுவில்நின்ற நற்றிரோ[2]தாயிஅருள்
கிட்டவழி காட்டிக் கிருபைசெய்வ தெக்காலம்? 84

[3]நானே நான்என்றிருந்தால் [4]நடுவுநின்ற கட்டழகி
தானே வெளிப்படுத்தித் தருவதென்ப தெக்காலம்? 85

அடர்ந்த மனக்காட்டை அஞ்செழுத்தாம் வாளாலே
தொடர்ந்து தொடர்ந்துவெட்டிச் சுடுவதினி யெக்காலம்? 86

ஐந்து பொறிவழிபோய் அலையுமிந்தப் பாழ்மனத்தை
[5]வெந்துவிழப் பார்த்து விழிப்பதினி யெக்காலம்? 87

இனமாண்டு சேர்ந்திருந்தோர் எல்லோருந் தான்மாண்டு
[6]சினமாண்டு போகவருள் [7]சேர்ந்திருப்ப தெக்காலம்? 88

சினமாண்டு பேசுஞ் செயல்மாண்டு நான்மாண்டு
மனமாண்டு முத்திநிலை வந்தடைவ தெக்காலம்? 89

---

82. ஆசை மூன்று-மண், பெண், பொன் என்ற மூவாசை. ஆசைவேர்-இங்கு அராக தத்துவம். அடியூடு - அடியோடு.

83. புரியட்டகம் - சூக்குமதேகம். ஈடேறுதல் - அருளடைதல். என் செனனம் - எந்த சென்மத்தைக் கொண்டு.

84. நட்டநடுவு - இங்கு இருதயம். நல் - நல்ல. திரோதாயி - திரோதாயி என்னும் சத்தியானது. அருள்கிட்ட - (சிவனை அடையப்பெறும்) அருள்நெறி பெற.

85. நானே நான் என்றிருந்தால் - ஆன்மாவாகிய நானே பிரமம் என்று எண்ணிக் கொண்டிருந்தால். கட்டழகி - திருவருட் சத்தி. வெளிப்படுத்தி - வெளிப்பட்டு.

86. மனக்காடு-அஞ்ஞானத்தோடு கூடிய மனமாகிய காடு. அஞ்செழுத்தாம் வாள் - பஞ்சாக்கரம் என்னும் வாளாயுதம். "அஞ்சக்கரமெனுங் கோடாலி" என்பது பட்டினத்துப் பிள்ளைவாக்கு.

87. ஐம்பொறி-மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. வெந்துவிழ - அடங்க. விழிப்பது - திருவருளில் விழிப்புக் கொள்வது.

88. இனம் - சுற்றத்தவர். சேர்ந்திருந்தோர் எல்லோரும் - தன்னுடன் கூடிய தத்துவத் தொகுதிகளெல்லாம். சினம் - கோபம்.

89. நான் மாண்டு - நான் என்னும் அகங்காரம் அழிந்து.

1. போற்றுமுன்னே. 2. தாய சத்தி. 3. நானே னெனவிருந்தால் 4. நடுவினிற். 5. வெந்துவிடப் 6. மனமாண்டு. 7. வந்திருப்ப.

அமையா மனத்தமையும் ஆனந்த [1]வீடுகண்டால்
இமையாமல் நோக்கி இருப்பதினி யெக்காலம்? 90

[2]கூடுவிட்டுச் சீவன்மெள்ளக் கொட்டாவி கொண்டாற்போல்
[3]மாடுவிடு முன்னே[4]நான் மாண்டிருப்ப தெக்காலம்? 91

[5]ஊனிறைந்த காயம் உயிரிழந்து போகுமுன்னே
நானிறந்து போகவினி நாள்வருவ தெக்காலம்? 92

கெட்டுவிடு [6]மாந்தர் கெர்விதங்கள் பேசிவந்து
சுட்டுவிடு முன்என்னைச் சுட்டிருப்ப தெக்காலம்? 93

தோலேணி வைத்தேறித் தூரநடந் தெய்க்காமல்
நூலேணி வைத்தேறி நோக்குவது மெக்காலம்? 94

வாயோடு கண்மூடி மயக்கமுற்று நில்லாமல்
தாயோடு [7]கண்மூடித் தழுவிநிற்ப தெக்காலம்? 95

முன்னைவினை யால்அறிவு [8]முற்றாமல் பின்மறைந்தால்
அன்னைதனைத் தேடி அமுதுண்ப தெக்காலம்? 96

இணைபிரிந்த [9]போதலறி இன்பமுறும் அன்றிலைப்போல்
துணைபிரிந்த போதருள் நூல் தொடர்ந்துகொள்வ தெக்காலம்? 97

---

90. அமையா - தன்வழிப்பட்டு ஒடுங்காத. ஆனந்த வீடு - சிவானந்த வீடு. இமையாமல் நோக்கி - ஒரே நிலையில் நின்று தரிசித்து.

91. கூடு - உடல். மாடு - செல்வம். மாண்டிருப்பது - மாட்சிமையுடன் தன்னை மறந்து இருப்பது.

92. ஊன் - மாமிசம். காயம் - உடல். நான் இறத்தல் - யான் என்ற அகங்காரம் அழிதல். நாள் - இங்குச் சிவயோக வாழ்நாள்.

93. கெட்டுவிடுமாந்தர் - வீண்காலங்கழித்துக் கெடுகின்ற மக்கள்.

94. தோல் - உடல். தூர நடந்து - பற்பல தேசங்களில் சென்று சஞ்சரித்தது. நூல் - ஞானசாத்திரம்.

95. மயக்கமுற்று - (மனம் அடங்காமையால்) மயக்கம் அடைந்து. தாய் - திருவருட் சத்தி. கண் - அறிவாகிய கண், தழுவி - அருளைத்தழுவி.

96. முற்றாமல் - அழுந்தாமல். பின் மறைந்தால் - திரோதான சத்தியால் மறைவு உண்டாயின். அன்னை – திருவருட் சத்தி.

97. இணைபிரிந்த போது - ஆண் பெண் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து நின்ற போது. அலறி - கூப்பிட்டு. அன்றில் - ஒருவகைப்பறவை. துணை பிரிந்தபோது - ஆசாரியனைப் பிரிந்தபோது.

1. வீடு கண்டங்கு. 2. கூண்டுவிடுஞ், 3. மாண்டுவிடும். 4. மனம். 5. ஊனிறக்கக் காய முயிரிது. 6. மாதர். 7. கண்கூடித். 8. முந்தாமல். 9. போதறிவின்.

[1]பாகனடு மாறிப் பயந்தெழுந்த சித்திரத்தை
[2]ஏகனடு மூலத் திருத்துவது மெக்காலம்? 98

காசினி யெலாம்நடந்து காலோய்ந்து போகாமல்
வாசிதனில் ஏறி வருவதினி யெக்காலம்? 99

[3]ஒளிபடருங் குண்டலியை உன்னியுணர் வால்எழுப்பிச்
[4]சுழிமுனைத் தாள்திறந்து தூண்டுவது மெக்காலம்? 100

இடைபிங் கலைநடுவே இயங்குஞ் சுழிமுனைமேல்
தடையறவே நின்று [5]சலித்திருப்ப தெக்காலம்? 101

மூல நெருப்பைவிட்டு [6]மூட்டிநிலா மண்டலத்தில்
பாலை இறக்கியுண்டு பசியொழிவ தெக்காலம்? 102

ஆகவெளிக் குள்ளே அடங்காப் [7]புரவிசெல்லா
ஏக [8]வெளியினிலே இனிதிருப்ப தெக்காலம்? 103

பன்னிரண்டு காற்புரவி பாய்ந்துசில்லந் தட்டாமல்
[9]பின்னிரண்டு [10]சங்கிலிக்குட் பிணிப்பதினி யெக்காலம்? 104

நாட்டுக்கால் இரண்டுவிட்டு நடுவுக்கா லூடேபோய்
ஆட்டுக்கால் இரண்டினுள்ளே அமர்ந்திருப்ப தெக்காலம்? 105

---

98. சித்திரத்தை - உலகப்பற்றாகிய சித்திரத்தை (வெறுத்து). மூலம் - மூலாதாரம்; சிவமூலமந்திரமுமாம்.

99. வாசிதனில் ஏறி - வாசியினை அடக்கி. வருவது - வாழுவது.

100. குண்டலி - குண்டலி சத்தி. உணர்வால் - அறிவைக் கொண்டு. தூண்டுவது - திருவருளைத்தரிசிப்பது. சுழிமுனை - நடுநாடி.

101. இடை - இடைகலை. சலித்து - அசைவற்று, மோனத்து.

102. மூல நெருப்பு - மூலாதாரத்திலுள்ள அக்கினி. மூட்டிவிட்டு - எழுப்பி. பால் - அமிர்தம். இறக்கி - வடியச் செய்து.

103. ஆக வெளிக்குள் - மனமாகிய வெளிக்குள். புரவி - வாசியாகிய குதிரை. ஏகவெளி - சிதாகாசம்.

104. பன்னிரண்டு கால்புரவி - பன்னிரண்டங்குலம் செல்லும் வாயுவினை. சில்லம் - அளவு. பின் இரண்டு - இடகலை பிங்கலை ஆகிய.

105. நாட்டுக்கால் இரண்டு - இரேசக பூரகங்களாகிய இரண்டை. நடுவுக்காலூடு - கும்பகத்தின் மூலத்தில். ஆட்டுக்கால்-நடிக்கும் முதல்வனது திருவடிகள்.

1. பாசநடு வேறிப். 2. ஏசநடு. 3. ஒலிபடருங். 4. சுழிமுனைத் தாள் துறந்து. 5. சலிப்பாற்றுவ. 6. மூடி, முட்டி. 7. புரவி செல்ல 8. வெளிகாட்டி. 9. பின்னிசின்று. 10. சங்குலிக்குப் பிழைப்பதினி.

பாற்பசுவைப் பூட்டிப் பதியில்வைத்துச் சிராட்டிக்
காற்பசுவை ஓட்டியதில் கட்டிவைப்ப தெக்காலம் ? 106

பலவிடத்தே மனத்தைப் [1]பாயவிட்டுப் பாராமல்
நிலவறையி னூடேபோய் நேர்படுவ தெக்காலம் ? 107

காமக் [2]கடல்கடந்து கரையேறிப் போவதற்கே
ஓமக்கனல் வளர்த்திங்(கு) உள்ளிருப்ப தெக்காலம் ? 108

உதயச் சுடர்மூன்றும் உள்வீட்டி லேகொளுத்தி
இதயத் [3]தருநடனம் இனிக்காண்ப தெக்காலம் ? 109

வேதாந்த வேதமெல்லாம் விட்டேறி யேகடந்து
நாதாந்த மூல நடுவிருப்ப தெக்காலம் ? 110

[4]பட்டமற்றுக் காற்றில் பறந்தாடும் சூத்திரம்போல்
விட்டு வெளியாக விசுவசித்த லெக்காலம் ? 111

அட்டாங்க யோகமதற்(கு) அப்பாலுக் கப்பாலாய்
கிட்டாப் [5]பொருளதனைக் கிட்டுவது மெக்காலம் ? 112

ஒட்டாமல் ஒட்டிநிற்கும் உடலுமுயி ரும்பிரித்தே
எட்டாப் [6]பழம்பதிக்கிங்(கு) ஏணிவைப்ப தெக்காலம் ? 113

---

106. பாற்பசு - பாசத்தன்மை. பூட்டி - அறிந்து ஒட்டி. பதியில் - பதித்தன்மையில். காற்பசு - பிராணவாயு. ஓட்டி - உள்ளே செலுத்தி. கட்டிவைப்பது - இதயத்தில் கட்டுவது.

107. பலவிடத்து - பற்பல விஷயங்களில். நிலவறையினூடே போய் - குகையினுள் சென்றிருந்து. நேர்படுவது - (திருவருளைக்கண்டு) தரிசிப்பது.

108. காமக்கடல் - காமமாகிய கடல். காமம் - காமநோய் ; ஆசையுமாம். ஓமக்கனல் - அந்தர்யாகம். உள் - உன்திருவடி நிழலுள்.

109. உதயச் சுடர் மூன்று - ஆகவனீயம் தட்சணக்கினியம், காருகபத்தியம் என்னும் மூன்று அக்கினி. உள் வீடு - உடல்.

110. விட்டேறியே கடந்து - அப்பாற் கடந்து சென்று. நாதாந்த மூலநடு - நாததத்துவமுடிவில் விளங்கும் மூலப்பொருளிடத்து.

111. பட்டம் அற்று - காற்றூடி அறுந்து. சூத்திரம் - கயிறு ; இங்குப் பற்றற்ற உடலுக்கு உவமை. விட்டு - உலகப்பற்றைவிட்டு. வெளி ஆக - சிதாகாய வெளியில் கூட. விசுவசித்தல் - பக்திகொள்ளுதல்.

112. கிட்டாப் பொருள் - ஆன்ம அறிவுக்கு எட்டாமல் விளங்கும் பரம்பொருள்.

113. ஒட்டாமல் ஒட்டிநிற்கும் - தத்துவங்களின் கூட்டுறவால் கூடிநிற்கும். எட்டா - ஆன்ம அறிவுக்கு அறிய முடியாத. பழம்பதி - சிவபதம். ஏணி - திருவருளாகிய ஏணி.

1. பரப்பிவிட்டுப். 2. கனல்கடந்து. 3. திருநடனம். 4. பட்டமறு காற்றில் பாய்ந்தாடும். 5. பொருளெனக்குக். 6. பழம் பறிக்க.

பாசத்தை நீக்கிப் பசுவைப் பதியில்விட்டு
நேசத்தி னுள்ளே [1]நிறைந்திருப்ப தெக்காலம்? 114

ஆசார நேமம் அனுட்டான மும்மறந்து
[2]பேசாமெய்ஞ் ஞானநிலை பெற்றிருப்ப தெக்காலம்? 115

பல்லா யிரங்கோடி பகிரண்ட மும்[3]படைப்பே
அல்லாது வேறிலையென்(று) அறிவதினி யெக்காலம்? 116

ஆதிமுத லாகிநின்ற அரியென்னும் அட்சரத்தை
ஓதியறிந் துள்ளே உணர்வதினி யெக்காலம்? 117

சாத்திரத்தைச் சுட்டுச் சதுமறையைப் [4]பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு துயரறுப்ப தெக்காலம்? 118

பஞ்சரித்துப் பேசும் பலகலைக்கெட் டாப்பொருளில்
சஞ்சரித்து வாழ்ந்து [5]தவம்பெறுவ தெக்காலம்? 119

மலமுஞ் சலமுமற்று மாயையற்று மானமாற்று
நலமுங் குலமுமற்று நானிருப்ப தெக்காலம்? 120

ஓடாமல் ஓடி உலகைவலம் வந்துசுற்றித்
தேடாமல் என்னிடமாய்த் தெரிசிப்ப தெக்காலம்? 121

---

114. பாசம் - ஆணவம், மாயை, கன்மம். பசுவை - ஆன்மாவை. விட்டு - கூடி. நேசத்தினுள் - அன்போடு.

115. ஆசாரம் - சுத்தம். நேமம் - நியமம். பேசா மெய்ஞ்ஞானநிலை - மௌனமாகிய சிவஞான நிலை.

116. படைப்பே - (இறைவனால்) படைக்கப்பட்டதே. அறிவது - உண்மை நிலையை உணர்வது.

117. அரி என்னும் அட்சரம் - சூக்கும பஞ்சாட்சரம்; அல்லது "சிவ சிவ" என்பதுமாம். (அரி - சிவன்.) அறிந்து உள்ளே - மணிபூரகம் என்னும் தானத்தினுள்ளே (நின்ற திருமாலை).

118. சாத்திரத்தை - மாயாவாத சாத்திரத்தை. சுட்டு - குறிப்பிடும். சதுமறையை - நால்வேதப்பொருளை. பொய்யாக்கி - மறுத்துக் கூறும். சூத்திரத்தை – சிவஞானபோத சூத்திரத்தை. கண்டு - படித்துணர்ந்து.

119. பஞ்சரித்துப் பேசும் – விரிவாகப் பேசுகின்ற. பலகலை - வேத சாத்திரங்கள்.

120. நான் இருப்பது - நான் தனித்து யோக நிட்டையில் இருப்பது.

121. தேடாமல் - (இறைவனைத்) தேடி யலையாமல். என்னிடம் - என்னுள்ளத்தில்.

1. நினைந்திருப்ப. 2. பேசாமல் ஞானநிலை. 3. படைப்பும். 4. பேயாக்கிச். 5. தலம்பெறுவ.

அஞ்ஞானம் விட்டே அருள்ஞானத் [1]தெல்லைதொட்டுன்
மெய்ஞ்ஞான [2]வீடுபெற்று வெளிப்படுவ தெக்காலம்? 122

வெல்லுமட்டும் பார்த்து வெகுளியெலாம் விட்டகன்று
செல்லுமட்டுஞ் சிந்தை செலுத்துவது மெக்காலம்? 123

மேலாம் பதந்தேடி மெய்ப்பொருளை உள்ளிருத்தி
நாலாம் பதந்தேடி நான்பெறுவ தெக்காலம்? 124

எண்ணுத தூரமெல்லாம் [3]எண்ணியெண்ணிப் பாராமல்
கண்ணுடிக் குள்ளொளிபோல் கண்டறிவ தெக்காலம்? 125

என்னை அறிந்துகொண்டே எங்கோமா [4]னேடிருக்கும்
தன்மை அறிந்து சமைந்திருப்ப தெக்காலம்? 126

ஆருதா ரங்கடந்த ஆனந்தப் பேரொளியைப்
பேருகக் கண்டுநான் பெற்றிருப்ப தெக்காலம்? 127

ஆணவ காமியத்தால் அழிந்துடலம் போகாமுன்
காணுதல் இன்பமுற்றுக் கண்டருள்வ தெக்காலம்? 128

மாயத்தை நீக்கி வரும்வினையைப் பாழாக்கிக்
காயத்தை வேருக்கிக் காண்பதுவே யெக்காலம்? 129

---

122. அஞ்ஞானம் - உலக பாசம். எல்லை தொட்டு - எல்லையில் நின்று.

123. வெல்லுமட்டும் பார்த்து- தத்துவசேட்டைகளையெல்லாம் வென்று. செல்லுமட்டும் - (திருவருளிடத்துச்) செல்லும் வரையில்.

124. மேலாம் பதம் தேடி - சன்மார்க்க நிலையிதனை அறிந்து நின்று. நாலாம்பதம் - சாயுச்சியம்; இரண்டறக்கலத்தல்.

125. எண்ணுத தூரம் - அறிவுக்கு அதி தூரமான சாஸ்திரங்களை யெல்லாம். கண்டறிவது - (மனத்துள் நின்ற அறிவொளியைக்) கண்டுணர்வது.

126. என்னை அறிந்து - ஆன்மதரிசனம் செய்து. எங்கோமான் - பரமான்மா - சமைந்திருப்பது. கலந்திருக்கும் நிலையினை அடைவது.

127. ஆருதாரம் - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன. பேரொளி - துவாத சாந்தத்திலுள்ள அருட்பெருஞ்சோதி. பேறு - செல்வம்.

128. காமியம் - கன்மமலம். காணுதலால் - அந்தர்முகமாகக் காணுதலால் ஆகிய. கண்டறிவது - உண்மையுணர்வது.

129. மாயம் - மாயாமலம். வருவினை - ஆகாமியம். வேருக்கி - வருத்தி (தவநிலையில் நின்று).

1. தொல்லைதொட்டு. 2. வீடுபெற விடிவதினி. 3. எண்ணிப்பாராமலுன்னைக். 4. னேடிருக்கத் தன்னை.

மும்மலமுஞ் சேர்ந்து முளைத்தெழுந்த காயமிதை
நின்மலமாய்க் கண்டுவினை [1]நீக்கிநிற்ப தெக்காலம்? 130

முன்னை வினைகெடவே மூன்றுவகைக் காட்சியினல்
உன்னை வெளிப்படுத்தி உறுவதினி யெக்காலம்? 131

கண்ணிெளி பாய்ந்ததுவுங் கருத்தறிந்து கொண்டதுவும்
விண்ணிெளி கண்டதுவும் வெளிப்படுவ தெக்காலம்? 132

[2]கனவுகண்டாற் போலெனக்குக் காட்டி[3]மறைந் தேயிருந்த
நினைவைப் பரவெளிமேல் [4]நிறுத்துவது மெக்காலம்? 133

ஆரென்று கேட்டதுவும் அறிவுவந்து கண்டதுவும்
பாரென்று சொன்னதுவும் பகுத்தறிவ தெக்காலம்? 134

நினைக்கும் [5]நினைவுதொறும் நிறைந்தபரி பூரணத்தை
முனைக்குமேற் [6]கண்டுகண்ணில் முத்துதிர்ப்ப தெக்காலம்? 135

இன்னதென்று சொல்லவொண்ணு எல்லையற்றவான் பொருளைச்
சொன்னதென்று நானறிந்து சொல்வதினி யெக்காலம்? 136

முப்பாழும் பாழாய் முதற்பாழும் [7]சூனியமாய்
[8]அப்பாழும் பாழாய் அன்புசெய்வ தெக்காலம்? 137

---

**130.** மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை. நின்மலம் - பரிசுத்தம்; சிவகரணம். வினை - நல்வினை, தீவினை.

**131.** முன்னைவினை - பிராரத்தவினை. மூவகைக்காட்சி - தத்துவதரிசனம், ஆன்மதரிசனம், சிவதரிசனம் என்ற மூவகைக் காட்சி. உறுவது - அடைவது.

**132.** கருத்து - மனம். விண்ணெளி - சிற்சோதி.

**133.** கண்டாற்போல் - கண்டு மறந்துவிடும் தன்மைபோல. நிறுத்துவது - மறவாமல் நிலைபெறச் செய்வது.

**134.** ஆர் என்று கேட்டதுவும் - நான் யார் என்று தத்துவ ஆராய்ச்சி செய்ததுவும். கண்டது - ஆன்மதரிசனம் செய்தது. பார் என்று – அத்துவிதமாகப் பார் என்று.

**135.** முனைக்குமேல் - சுழுமுனைக்கு மேல். கண்ணில் - ஞானக் கண்ணில்.

**136.** சொல்ல ஒண்ணு - வாக்கால் சொல்லுதற்கரிய. வான் பொருள் - திருவருள். சொன்னது - குரு உபதேசித்தது.

**137.** முப்பாழ் - பிரகிருதிமாயை, அசுத்தமாயை, சுத்தமாயை என்பன. முதற்பாழ் - விந்து, அப்பாழ் - நாதம். அன்பு - (பரசிவத்திற்கு) அன்பு.

1. நீங்கிருப்ப. 2. கனவுகண்டாப். 3. மறைத்தேயிருக்க. 4. நினைந்ததுவு. 5. தினந்தோறும். 6. கண்டு கண்டு முனைத்தெழுப்ப. 7. நிற்றாளாய். 8. அப்பாலும்.

பொன்னிற் பலவிதமாய்ப் பூடணமுண் டானதுபோல்
உன்னிற் பிறந்துன்னில் ஒடுங்குவது மெக்காலம்? 153

நாயிற் கடைப்பிறப்பாய் நான்பிறந்த துன்பமற
வேயிற் கனலொளிபோல் விளங்குவது மெக்காலம்? 154

சூரிய காந்தவொளி சூழ்ந்துபஞ்சைச் சுட்டதுபோல்
ஆரியன் தோற்றத்(து) அருள்பெறுவ தெக்காலம்? 155

காந்தம் வலித்திரும்பைக் கவர்ந்திழுத்துக் கொண்டதுபோல்
பாய்ந்து பிடித்திழுத்துன் பதத்தில்வைப்ப தெக்காலம்? 156

இரும்பில் கனல்மூட்டி இவ்வுருப்போய் அவ்வுருவாய்க்
கரும்பில் சுவைரசத்தைக் கண்டறிவ தெக்காலம்? 157

கருக்கொண்ட முட்டைதனைக் கடலாமை தான்நினைக்க
உருக்கொண்ட வாறதுபோல் உனைநினைப்ப தெக்காலம்? 158

வீடுவிட்டுப் பாய்ந்து வெளியில் வருவார்போல்
கூடுவிட்டுப் பாயும் குறிப்பறிவ தெக்காலம்? 159

---

153. பொன்னின் - பொன்னில் இருந்து. இங்கு மாயையின் காரண காரியங்களைப்பற்றி விளக்குவது.

154. நாயின் - நாயினும். கடைப்பிறப்பு - கீழ்ப்பிறப்பு. பிறந்த துன்பம் - உடல் எடுத்து அனுபவித்த துன்பம். அற - நீங்கி. விளங்குவது - ஒன்றாய் விளங்குவது.

155. சூரியகாந்த ஒளி - சூரிய காந்தக்கல்லில் தோன்றிய சூரிய வொளி. சுட்டதுபோல் - சுட்டு எரிப்பதுபோல். அருள்பெறுவது - மலநாசம் அடைந்து திருவருள் பதிவது.

156. காந்தம் - காந்தமானது. வலித்துக் கவர்ந்து இழுத்து - தன்வசம் இழுத்து. பாய்ந்து பிடித்து - (தேவரீரின்) திருவருள் என்மீது பதிந்து. உன்பதத்தில் - (தேவரீரின்) திருவடியின்கீழ் (அடியவனை).

157. இவ்வுருப்போய் - இரும்பின் தோற்றம்போய். அவ்வுருவாய் - அக்கினி வடிவாய்(த் தோன்றுதல்போல் திருவருள் பதியத் திருவருள் மயமான காலத்தில்). கரும்பில் சுவை ரசம் - இங்குச் சிவானந்தத்தேன். கண்டு அறிவது - பெற்று அனுபவிப்பது.

158. கடல் ஆமை - கடலில் உள்ள ஆமை. கருக்கொண்ட முட்டைதனை - கடற்கரையில் இட்டுவைத்த தன் முட்டையை. உனை அடைவது (ஆசாரியன் அடியேனை நினைத்துப்பாச விமோசனம் செய்து ஆட்கொண்டபின்) தேவரீரை அடைந்து உய்வது. இச்செய்யுள் மானச தீட்சையைக் குறிப்பது.

159. வீடு - உலகமாகிய வீட்டினை. பாயும் - வெளிவந்த நாளில். குறிப்பு - திருவருட் குறிப்பினை.

கடைந்தவெண்ணெய் மோரில் கலவாத வாறதுபோல்
[1]உடைந்த தமியேன் உனைக்காண்ப தெக்காலம்? 160

எள்ளுங் கரும்பும் [2]எழுமலருங் காயமும்போல்
உள்ளும் புறம்புநின்ற துணர்ந்தறிவ தெக்காலம்? 161

இருளை [3]ஒளிவிழுங்கி ஏகவுருக் கொண்டதுபோல்
அருளை விழுங்குமிருள் அகன்றுநிற்ப தெக்காலம்? 162

மின்னெழுந்து [4]மின்னொடுங்கி விண்ணிலுறைந் [5]தாற்போல்நீ
என்னுள்நின்ற தென்னுள்ளே யானறிவ தெக்காலம்? 163

விளங்கிநின்ற தாரகையை வெய்யோன் மறைத்தல்போல்
களங்கமற உன்காட்சி கண்டறிவ தெக்காலம்? 164

அன்னம் புனலைவகுத்து அமுதத்தை உண்டாற்போல்
என்னை வகுத்துன்னை இனிக்காண்ப தெக்காலம்? 165

கண்ட புனற்குடத்தில் கதிரொளிகள் பாய்ந்தாற்போல்
கொண்ட சொரூபமதைக் கூர்ந்தறிவ தெக்காலம்? 166

---

**160.** மோரில் கடைந்த வெண்ணெய் - மோரினின்றும் கடைந்து எடுக்கப் பெற்ற வெண்ணெய் (மறுபடியும்). கலவாதவாறுபோல் - மோரின்கண் கலவாததுபோல. அடைந்த - (ஆணவமலத்தினின்று) வெளிப்பட்டு நின்ற. தமியேன் - அடியேன் (மீண்டும் ஆணவமலத்தில் கட்டுப்படாமல்).

**161.** எள்ளும் - எள்ளில் (எண்ணெயும்). கரும்பும் - கரும்பில் (சுவையும்). எழு மலரும் - அன்று அலர்ந்த மலரில் (மணமும்). காயமும்போல் - உடலில் உயிரும்போல. உள்ளும்புறம்பும் நின்றது - நீக்கமற நிறைகின்ற பரம்பொருளை.

**162.** இருள் - பூத இருள். ஒளி - சூரியவொளி. ஏகஉரு - (எங்கும்) ஒளி வடிவு. விழுங்கும் - மறைக்கும். இருள் - ஆணவமல இருள்.

**163.** மின் எழுந்து - மின்னல் தோன்றி. மின் ஒடுங்கி - அதன் ஒளி குறைந்து. உறைந்தாற்போல் - பொருந்தி மறைவதுபோல. என்உள் நின்றது - என் உள்ளத்தில் நின்ற திருவருள்.

**164.** தாரகை - நட்சத்திரங்களை. களங்கமற - (என் மாயையினை மறைத்து) குற்றமற (விளங்கும்). உன்காட்சி - சின்மயக்காட்சியினை (யான்).

**165.** அன்னம் - அன்னப்பறவை. புனலை வகுத்து - பாலினின்றும் தண்ணீரைப்பிரித்து. என்னை வகுத்து - பசுஞானத்தினின்றும் பதி ஞானத்தைப் பிரித்து. உன்னை - அப்பதிஞானத்தால் தேவரீரை.

**166.** கண்ட - காணப்படும். புனல் குடத்தில் - நீர்நிறைந்த பாண்டத்தில். கொண்ட - மாயையால் விழுங்கப்பெற்ற. சொரூபமதை - உலகப் பொருளை.

1. அடைந்ததமியேனுனக்கே ஆட்படுவ. 2. இளமலரும். 3. வெளி விழுங்கி. 4. மின்னொடுங்கி. 5. தாற்போல்.

பூணுகின்ற பொன்னணிந்தார் பொன்சுமக்கு மோவுடலைக்
[1]காணுகின்ற என்கருத்தில் கண்டறிவ தெக்காலம்? 167

செம்பிற் களிம்புபோல் சிவரூபத் தைவிழுங்கி
வெம்பிநின்ற மும்மலத்தை வேரறுப்ப தெக்காலம்? 168

ஆவியுங் காயமும்போல் [2]ஆத்துமத்தில் நின்றதனைப்
பாவி அறிந்துமனம் பற்றிநிற்ப தெக்காலம்? 169

ஊமை கனுக்கண்(டு) [3]உரைக்கறியா இன்பமதை
நாமறிந்து கொள்வதற்கு நாள்வருவ தெக்காலம்? 170

சாகாச் சிவனடியே தப்பாதார் எப்போதும்
[4]போகார் உடலகன்று போவரென்ப தெக்காலம்? 171

காட்டுமருள் ஞானக் கடலின்பத் தோணிவிட்டு
மூட்டுகரு ணைக்கடலில் மூழ்குவது மெக்காலம்? 172

தானுரோ நீயாரோ தற்பரமாய் நின்ருரோ
நானுரோ என்றறிய நாள்வருவ தெக்காலம்? 173

---

*167.* பொன் அணிந்தால்-பொன்னுபரணம் அணிந்தால் (உடல்சுமக்குமே அன்றி). பொன் உடலை சுமக்குமோ - பொன்னுபரணம் உடலைச் சுமக்குமோ (சுமக்காதவாறு போல).

*168.* செம்பில் - செம்பு என்ற உலோகத்தில் (நிறைந்த). வெம்பி நின்ற- கோபத்துடன் நின்ற. மும்மலம் - ஆணவம், மாயை, கன்மம் என்பன. வேர் அறுப்பது - அடியோடு களைந்து நீக்குவது.

*169.* ஆவியும் காயமும் போல் - உடலும் உயிரும் அபேதமாகக் கலந்து இருப்பதுபோல, ஆத்துமத்தில் நின்றதனை - (அருளும்) எனது உயிரும் கலந்த நின்றதனை.

*170.* உரைக்க அரியா - (அதனைப் பிறருக்குச்) சொல்ல வகையறியாது (மகிழும்). இன்பமதை - மகிழ்ச்சி போல (திருவருள் பதியப்பெற்று வெளியிட முடியாத பேரின்பத்தை).

*171.* சாகா - இறவாத அதாவது நித்தியனுன. தப்பாதார் - (தியானித்தலினின்றும்) நீங்காத சிவன் முத்தர்.

*172.* காட்டும் - (ஆசாரியனுல்) காட்டப்பெற்ற. இன்பத்தோணி-இன்பமாகிய தோணி. பூட்டும் - (எங்கும்) பொருந்திய.

*173.* தற்பரமாய் - மேலான பொருளாய். நானுரோ என்றறிய - ஆன்ம விசாரணை செய்து (உண்மை) அறிய.

1. தோணுகின்ற தென்கருத்தில் தோற்றுவ. 2. அன்னத்தில்நின்றதைத்தான். 3. உரைக்க ஊறிய. 4. போகா உடல்கண்டு.

நிட்டை தனைவிட்டு நினைவறிவு தப்பவிட்டு
வெட்ட [1]வெளிக்குள்ளே விரவிநிற்ப தெக்காலம்? 174

வெட்ட வெளிதனிலே விளைந்த[2]வெறும் பாழைநான்
[3]திட்டமறக் கண்டு தெளிவதினி யெக்காலம்? 175

எங்கும் [4]பரவடிவாய் என்வடிவும் நின்வடிவாய்க்
கங்குல்பகல் இன்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம்? 176

உண்டதுவும் மாதருடன் ஊடிச்சேர்ந் தின்பமதைக்
கண்டதுவும் நீயெனவே கண்டுகொள்வ தெக்காலம்? 177

எவரெவர்கள் எப்படிக்கண்(டு) எந்தப்படி நினைத்தார்
அவரவர்க்குத் தான்அப்படி ஆவதுவு மெக்காலம்? 178

ஈமென்று கேட்டதுவும் என்னுள்ளே நின்றதுவும்
[5]ஓமென்று சொன்னதுவும் [6]உற்றறிவ தெக்காலம்? 179

[7]சித்தம் பிறந்தவிடம் சின்மயமாய் நின்றவிடம்
[8]சித்தம் மறந்தவிடம் தேர்ந்தறிவ தெக்காலம்? 180

ஆட்டமொன்றும் இல்லாமல் அசைவுசற்றுங் காணாமல்
தேட்டமற்ற வான்பொருளைத் தேடுவது மெக்காலம்? 181

---

174. நிட்டைதனைவிட்டு - (உபாசனையின் பயனைப் பெற்றபின்) தியான நிலையினை விடுத்து. தப்பவிட்டு - கடந்து நின்று.

175. வெட்டவெளி - சிதாகாயம். வெறும் பாழ் - நாததத்துவம்.

176. பரவடிவாய் – சிவவடிவமாய். கங்குல் பகல் இன்றி - சகல கேவல நிலையினின்று நீங்கி (ச் சுத்தாவத்தை நிலையில் நின்று).

177. உண்டதுவும் - உலக இன்பத்தை அனுபவித்ததும். ஊடி - பிணங்கி. "ஊடுதல் காமத்திற்கு இன்பம்" என்பது திருக்குறள். நீ எனவே - தேவரீரே கூட்டி வைத்தீர் என்ற உண்மையினை.

178. இங்கு, "அவரவர் வினைவழி அவரவர் வந்தனர், அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்" என்ற சிவபோகசார அடிகள் நினைக்கற்பாலன.

179. ஈம் என்று கேட்டதுவும் - ஈம் என்ற ஒலி (நிட்டையில்) அறிவதும். நின்றதுவும் - குண்டலி சத்தி நிலையுற்றதும், சொன்னதும் - ஒலிப்பதும்.

180. சித்தம் - மனம். சின்மயம் - ஞானவடிவு. மறந்தவிடம் - கடந்த விடம்.

181. ஆட்டம் - அசைவு. அசைவு சற்றும் - சிறிது சோர்வும். தேட்டம் அற்ற – ஆசையற்ற. வான்பொருள் - திருவருள்.

1. வெளியில். 2. வெம் பாசத்தை. 3. திட்டமுடனே. 4. பல வடிவாய். 5. நாமென்று. 6. நமக்கறிவ. 7. சத்தம் பிறந்தவிடம் தன்மயமாய். 8. சித்தம் பிறந்தவிடம்.

போக்கும் வரவும் புறம்புமுள்ளு மாகிநின்று
காக்குமொரு பொருளைக் கலந்துநிற்ப தெக்காலம் ? 182

நானெனவும் நீயெனவும் [1]நாமிரண்டும் அற்றொன்று
நீயெனவே சிந்தைதனில் நேர்படுவ தெக்காலம் ? 183

அறிவையறி வாலறிந்தே அறியும் அறிவுதனிலே
பிறிவுபட நில்லாமல் [2]பிடிப்பதினி யெக்காலம் ? 184

நீடும் புவனமெல்லாம் நிறைந்துநின்ற [3]சின்மயமாய்
ஆடும் திருக்கூத்தை அறிவதினி யெக்காலம் ? 185

தித்தியென்ற கூத்தில் திருச்சிலம்பின் ஓசைகளும்
பக்தியுடன் கேட்டுப் பணிவதினி யெக்காலம் ? 186

நயனத் திடைவழிபோய் நண்ணும் பரவெளியில்
[4]சயனத் திருந்து தலைப்படுவ தெக்காலம் ? 187

அந்தரத்தின் நீர்பூத்(து) அலர்ந்தெழுந்த தாமரைபோல்
[5]தந்திரத்தால் நோக்கித் தலைப்படுவ தெக்காலம் ? 188

அருவி மலைநடுவே ஆயிரக்கால் மண்டபத்துள்
திருவிளையாட் டங்கண்டு தெரிசிப்ப தெக்காலம் ? 189

---

182. போக்கும் வரவும் - ஒன்றை நாடிப் போதலும், அதனினின்றுமீளுதலும். புறம்பும் உள்ளும் - வெளிப்பொருளும் உட்பொருளும். காக்கும் - (யாவற்றையும்) பாதுகாக்கும்.

183. நாமிரண்டும் அற்று ஒன்று - இஃது அத்துவித நிலை ஆகும்.

184. அறிவை - ஆன்ம அறிவை. அறிவால் - திருவருளால். பிறிவுபட - நில்லாமல். வேறுபடாமல் தாதான்மியமாய். பிடிப்பது-உடன்பட்டுநிற்பது.

185. நீடும் - பெரிய. சின்மயமாய் - ஞானவடிவாய். திருக்கூத்து - ஆனந்த தாண்டவம்.

186. தித்தி என்ற - தித்தி என்ற தாள ஒத்துடன் ஆடுகின்ற. பக்தியுடன் - அன்பு மேலீட்டினால்.

187. நயனத்திடை வழிபோய் - ஆக்ஞை என்னும் தானத்தில் சென்று தியானித்து. பரவெளி - சிதாகாயம். சயனித்தல் - யோகநித்திரை செய்தல். தலைப்படுதல் - வாழ்தல்.

188. அந்தரத்தின் நீர் - ஆகாய கங்கையில். தந்திரத்தால் - சிவாகமப்படி கூறிய (யோக நிலையில்). நோக்கி - (இருதய தாமரை மலரை) நோக்கி.

189. அருவிமலை நடுவு - அமுததாரை பெருகிவரும் சந்திரமண்டலம். ஆயிரக்கால் மண்டபம் - பிரமரந்திரத்திற்கு மேலுள்ள துவாதசாந்த நிலை.

1. இரண்டுமிது வொன்றானால். 2 .பிடிபடுவ. 3. சித்திரமாய். 4. சயனத்தினில் திரிந்து. 5. சிந்தைவைத்துக் கண்டு தெரிசிப்ப.

உற்றுற்றுப் பார்க்க ஒளிதருமா னந்தமதை
நெற்றிக்கு நேர்கண்டு நிலைப்பதினி யெக்காலம்? 190

[1]மீனே மிகவுண்டு விக்கிநின்ற கொக்கதுபோல்
[2]ஞானத்தை மிகவுண்டு நானிற்ப தெக்காலம்? 191

கள்ளுண் டவர்போல் களிதருமா னந்தமதில்
தள்ளுண்டு [3]நின்றுடி தடைபடுவ தெக்காலம்? 192

தானென்ற ஆணவமுந் தத்துவமும் கெட்டொழிந்தே
ஏனென்ற பேச்சுமிலா(து) இலங்குவது மெக்காலம்? 193

பிறப்பும் இறப்புமற்றுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்பும் நினைப்புமற்று [4]மாண்டிருப்ப தெக்காலம்? 194

என்வசமுங் கெட்டு இருந்தவ சமுமழிந்து
தன்வசமுங் கெட்டருளைச் சார்ந்துநிற்ப தெக்காலம்? 195

தன்னை மறந்து [5]தலத்தின் நிலைமறந்து
கன்மம் மறந்து கதிபெறுவ தெக்காலம்? 196

என்னையென்னி லேமறந்து இருந்தபதி யும்மறந்து
தன்னையுந் தான்மறந்து தனித்துநிற்ப தெக்காலம்? 197

---

190. உற்றுற்றுப் பார்க்க - இலக்காக மனத்தைவைத்து நோக்க. ஒளி தரும் ஆனந்தம் - அருட்பெருஞ்சோதி.

191. ஞானத்தை - சிவஞானம் என்னும் தேனை. நிற்பது - (ஞானவடிவாய்) நிற்பது.

192. களி - மகிழ்ச்சி. ஆனந்தத்தால் - சிவானந்த மயக்கால். தடைபடுவது - (உலக வாழ்க்கையைத்) தடுத்து நிற்பது.

193. தான் என்ற - எல்லாம் தான் தான் என்கின்ற. தத்துவமும்-தத்துவ காரியங்களும். இலங்குவதும் - மௌனநிலையுற்று இருப்பதும்.

194. பேச்சுமற்று - மௌனமாகி. மாண்டிருப்பது - தற்போதம் ஒழிந்து இருப்பது.

195. என்வசமும்......தன்வசமுங்கெட்டு - உடல், உலகு, உயிர் இவைகளின் சுதந்திரத்தினின்றும் விலகி. அருளை - திருவருட் சுதந்திரத்தில்.

196. தன்னை என்றது உடல். தலத்துநிலை - உடலகம். கதி - மோட்சம்.

197. என்னை என்றது உடல். இருந்தபதி - பூமி. தன்னை - இங்கு ஆன்மா.

1. மீனைமிக வுண்டு கக்கி. 2. தேனைமிக வுண்டு தெவிட்டி நிற்ப. 3. திண்டாடி தடிபுரள்வ. 4. மாய்ந்திருப்ப. 5. தவத்தின்.

[1]தன்னையுந்தா னேமறந்து தலைவாசல் தாழ்போட்டே
உன்னை[2]நினைந் தேயுள்ளம் உருகிநிற்ப தெக்காலம்? 198

நானவனாய்க் காண்பதெல்லாம் ஞானவழி யாலறிந்து
தானவனாய் நின்று சரணடைவ தெக்காலம்? 199

தானந்த மில்லாத தற்பரத்தி னூடுருவில்
ஆனந்தங் கண்டே அமர்ந்திருப்ப தெக்காலம்? 200

சூதுங் களவுந் தொடர்வினையுஞ் சுட்டிடக்காற்(று)
ஊதுந்துருத் தியைப்போட்(டு) உனையடைவ தெக்காலம்? 201

காண்டத்தை வாங்கிக் கருமேகம் மீண்டதுபோல்
பாண்டத்தை நீக்கிப் பரமடைவ தெக்காலம்? 202

என்மயமாய்க் கண்டதெல்லாம் எண்ணியெண்ணிப் பார்த்தபின்பு
தன்மயமாய்க் கொண்டதிலே சார்ந்துநிற்ப தெக்காலம்? 203

பித்தாயங் கொண்டு பிரணவத்தை யூடறுத்துச்
செத்தாரைப் போலே திரிவதினி யெக்காலம்? 204

---

*198.* தன்னையும் தானே மறந்து - ஆன்மாவைக் கொண்டு ஆன்மாவை மறந்து. தலைவாசல் - மனமாகிய வாயிலை.

*199.* ஞானவழியால் - சிவோகம் பாவனையால். தான் அவனாய் நின்று - முதல்வனாக இருந்து. சரண் - (அவன்) திருவடிகளை.

*200.* தான் - ஆன்மாவாகிய தான். தற்பரத்தினூடு உருவில் - திருவருட் பெருக்கில் மூழ்கி.

*201.* சூது - வஞ்சனை. தொடர்வினை - பிராரத்துவம். சுட்டிட - (ஆகிய இவற்றை) எரித்து அழிக்க. துருத்தி - இங்கு உடல்.

*202.* காண்டத்தை வாங்கி - கடலின்கண் உள்ள உவர்நீரை உண்டு. மீண்டதுபோல் - நன்னீராகப் பொழிவதுபோல். பாண்டத்தை நீங்கி - உடலில் மலத்துடன் கூடிய உயிர் மலம் நீங்கப்பெற்று.

*203.* என்மயமாய் - (உலகமுழுவதும்) ஆன்ம சொரூபமாய். எண்ணி எண்ணிப் பார்த்த பின்பு - மிகமிக ஆலோசித்துத் திருவருளை நினைத்துப் பார்த்தபோது. தன்மயமாய்க்கொண்டு - பரமான்ம சொரூபமாய்க் கண்டு.

*204.* பித்தாயங் கொண்டு - பற்றற்ற பைத்தியத்தால். பிரணவத்தை யூடு அறுத்து - ஓம் என்று தியானம் செய்துகொண்டு. செத்தாரைப்போல - நடைப்பிணம் போல.

1. தன்னையென்னி லேமறந்து. 2. நினைந்துள்ளே உறங்குவ.

ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்ப தெக்காலம்? 205

ஓரின்பங் காட்டும் உயர்ஞான வீதி சென்று
பேரின்ப வீடுகண்டு பெற்றிருப்ப தெக்காலம்? 206

ஆயுங் கலைகளெல்லாம் ஆராய்ந்து பார்த்ததற்பின்
நீயென்று மில்லா நிசங்காண்ப தெக்காலம்? 207

குறியாகக் கொண்டு குலமளித்த நாயகனைப்
பிரியாமற் சேர்த்துப் பிறப்பறுப்ப தெக்காலம்? 208

மத்தடுத்து நின்று மருளாடு வார்போலப்
பித்தடுத்து நின்னருளைப் பெற்றிருப்ப தெக்காலம்? 209

சாவாமல் செத்திருந்து சற்குருவின் பொன்னடிக்கீழ்
வேகாமல் வெந்திருக்க வேண்டுவது மெக்காலம்? 210

என்னை அறியாமல் இருந்தாட்டும் சூத்திரநின்
தன்னை அறிந்து தவம் பெறுவ தெக்காலம்? 211

---

205. ஆதி கபிலர் சொன்ன - முற்காலத்தில் கபிலர் கூறிய; ஆதி என்பவள் வயிற்றில் பிறந்த கபிலர் கூறிய எனினுமாம். ஆகமம் - இங்கு நூல்; அது "கபிலர் அகவல்"

206. ஓர் - ஒப்பற்ற. உயர்ஞான வீதி - உயர்ந்த சித்தாந்த ஞான வீதியிலே.

207. ஆயும் - ஆராய்தற்குரிய. நீ என்றும் - தேவரீர் எப்பொழுதும். இல்லா - (எனக்கு அன்னியம்) இல்லாத. நிசம் - உண்மை.

208. குறியாகக் கொண்டு – இலட்சியமாக என்னை அடியவனுக்கி. குலம் அளித்த - சிவனடியார் கூட்டத்தில் சேர்ந்து (அவர்களுக்குத் தொண்டு புரியக் கட்டளை) அளித்த. நாயகனை - எம் தலைவனுகிய சிவபெருமானை.

209. மத்தடுத்து நின்று - மயக்கம் அடைந்து நின்று. பித்தடுத்து - உன் விஷயமாகப் பைத்தியங் கொண்டு.

210. சாவாமல் செத்திருந்து - உயிர்போன பிணமாக இராமல் நடைப் பிணம் போல் இருந்து அதாவது தன்னை மறந்து. வேகாமல் - பூதாக்கினியினுல் வெந்து போகாமல். வெந்திருக்க - ஞானக்கினியால் (சிவாக்கினியால்) வேகும்படி. வேண்டுவது - விரும்பி நிற்பது.

211. சூத்திரம் - நல்வினை தீவினை ஆகிய கயிற்றை (விடுத்து). நின் தன்னை - தேவரீரை.

உள்ளம் அறியா(து) ஒளிந்திருந்த நாயகனைக்
கள்ளமனம் தெளிந்து காண்பதினி யெக்காலம்? 212

வாசித்துங் காணுமல் வாய்விட்டும் போகாமல்
பூசித்துந் தோன்றுப் பொருள்காண்ப தெக்காலம்? 213

அல்லும் பகலுமென்றன் அறிவையறி வாலறிந்து
சொல்லும் முறைமறந்து தூங்குவது மெக்காலம்? 214

இயங்குஞ் சராசரத்தில் எள்ளுமெண் ணெயும்போல
முயங்கும் அந்தவேத முடிவறிவ தெக்காலம்? 215

ஊனுகி யூனில் உயிராகி எவ்வுலகந்
தானுகி நின்ற தனையறிவ தெக்காலம்? 216

என்னைவிட்டு நீங்காமல் என்னிடத்து நீயிருக்க
உன்னைவிட்டு நீங்கா(து) ஒருப்படுவ தெக்காலம்? 217

கடத்துகின்ற தோணிதனைக் கழைகள்குத்தி விட்டாற்போல்
நடத்துகின்ற சித்திரத்தை நானறிவ தெக்காலம்? 218

நின்றநிலை பேராமல் நினைவிலொன்றுஞ் சாராமல்
சென்றநிலை முத்தியென்று தேர்ந்தறிவ தெக்காலம்? 219

---

212. உள்ளம் அறியாது ஒளிந்திருந்த - திரோதான சத்தியால் மனத்தின் கண்ணே மறைந்திருந்த. கள்ளமனம் - திரோதான சத்தியால் வஞ்சித்த மனம்.

213. வாசித்தும் - சாத்திர ஆராய்ச்சியினுலும், யோகப் பயிற்சியினுலுமாம். வாய்விட்டும் போகாமல் - மௌனத்தினுலும்.

214. அறிவால் அறிந்து - திருவருளால் அறிந்து. சொல்லுமுறை மறந்து - மௌனமுற்று.

215. சரம் - அசையும் பொருள். அசரம் - அசையாப் பொருள். முயங்கும் - தழுவிநிற்கும். வேதமுடிவு - சித்தாந்த முதல்வன்.

216. ஊனுகி - உடலாகி. எவ்வுலகுந் தானுகி நின்றதன் - யாவும்தானேயாய் நின்ற முதல்வன்.

217. என்னிடத்து நீ இருக்க - தேவரீர் என்னிடம் அத்து விதமாகக் கலந்து இருப்பது போல. ஒருப்படுவது - ஒருமனப்படுதல்.

218. கடத்துகின்ற - (மீகாமனுல்) செலுத்தப்படுகின்ற. கழைகள் குத்தி விட்டாற்போல் - மூங்கில் குத்திக் கெடுத்து விட்டதுபோல. நடத்துகின்ற சித்திரத்தை - ஆன்மா வானது உலகில் செலுத்தும் உடலை வினைகள் கெடுத்து விட்ட விநோதத்தை.

219. நின்றநிலை - தியானநிலை. நினைவில் - மனத்தில். சென்றநிலை - சென்ற சித்தாந்த மார்க்கமே.

பொல்லாத காயமதைப் போட்டுவிடுக்கு முன்னே
கல்லாவின் பால்கறப்பக் கற்பதினி யெக்காலம்? 220

வெட்ட வெளிக்குள்ளே விளங்குஞ் சதாசிவத்தைக்
[1]கிட்டிவரத் தேடிக் கிருபைசெய்வ தெக்காலம்? 221

பேரறிவி லேமனத்தைப் பேராம லேயிருத்தி
ஓரறிவில் எந்நாளும் ஊன்றிநிற்ப தெக்காலம்? 222

அத்துவிதம் போலுமென்றன் ஆத்துமத்தி னுள்ளிருந்து
முத்திதர நின்ற முறையறிவ தெக்காலம்? 223

நானின்ற பாசமதில் நானிருந்து மாளாமல்
நீநின்ற கோலமதில் நிரவிநிற்ப தெக்காலம்? 224

ஆசை கொண்டமாதர் அடைகனவு நீக்கியுன் மேல்
ஓசை கொண்டுநானும் ஒடுங்குவது மெக்காலம்? 225

தன்னுயிரைக் கொண்டு தான்திரிந்த வாறதுபோல்
உன்னுயிரைக் கொண்டிங்(கு) ஒடுங்குவது மெக்காலம்? 226

சேற்றிற் கிளைநாட்டுந் திடமாம் உடலையினிக்
காற்றிலுழல் சூத்திரமாய்க் காண்பதினி யெக்காலம்? 227

---

**220.** பொல்லாத - தீவினையால் எடுத்த. கல்லாவின்போல் - ஆன்ம பசுவின் அமிர்ததாரையை. கறக்க - இறக்குவதற்கு.

**221.** வெட்டவெளி - சிதாகாயம். தேடி - (யோக சாதனையால்) ஆராய்ந்து. கிட்டிவர - அடைய.

**222.** பேரறிவு - திருவருள். ஓரறிவில் - ஒப்பற்ற ஞானப் பொருளில்.

**223.** அத்துவிதம் - இறைவனும் ஆன்மாவும் ஒன்றுமன்றி இரண்டுமன்றி நிற்கும் நிலை. ஆத்துமம் - ஆன்மா. நின்ற முறை - (கொடுக்கும்படி) நின்ற வகையினை.

**224.** நான் நின்ற - நான் என்று அகங்கரித்து நின்ற. நீ நின்றகோலம் - தேவரீரின் திருவருட் பெருக்கில்.

**225.** அடை கனவு - வரும் கனவினை. ஓசைகொண்டு - நாதவோசையோடு தியானங்கொண்டு.

**226.** தான்திரிந்தவாறதுபோல் - சுதந்திரனாய்த் திரிந்ததுபோல. உன் உயிரைக்கொண்டு - தேவரீரின் திருவருளை ஆதரவாகக் கொண்டு.

**227.** கிளை - மரக்கொம்பு. நாட்டும் - நாட்டுவதால் திடமுறுததுபோல.

1. கிட்டவரத் தேடக்.

முன்னைவினை யாலறிவு முற்றுமறப் பின்மறைத்தால்
அன்னைதனைத் தேடி அமுதுண்ப தெக்காலம்? 228

உற்றவெளி தனிலே உற்றுப்பார்த் தந்தரத்தே
மற்றமற மாயை மாள்வதினி யெக்காலம்? 229

ஏடலர்ந்த பங்கயமும் இருகருணை நேத்திரமும்
தோடணிந்த குண்டலமுந் தோன்றுவது மெக்காலம்? 230

ஐயாறும் ஆறும் அகன்று வெறுவெளியில்
மையிருளில் நின்றமனம் மாள்வதினி யெக்காலம்? 231

நானாரோ நீயாரோ நன்றும் பரமான
தானாரோ வென்றுணர்ந்து தவமுடிப்ப தெக்காலம்? 232

நச்சரவை நீக்கி நன்மணிகைக் கொண்டாற்போல்
சொற்சரவைத் தீர்த்தநல்லோர் துணைகொள்வ தெக்காலம்? 233

காரணமாய் வந்தெனன் கருத்தில் உரைத்ததெல்லாம்
பூரணமா கக்கண்டு புகழ்ந்திருப்ப தெக்காலம்? 234

என்னையே நானறியேன் இந்தவண்ணஞ் சொன்னதெல்லாப்
முன்னையோர் கைக்கொள்ள முன்பணிவ தெக்காலம்? 235

## எக்காலக்கண்ணி

### முற்றிற்று

---

இடமாம் - பிராணவாயுவில் நிலைத்த. காற்றில் உழல் சூத்திரம் - இது பற்றற்ற நிலையினைக் குறிப்பது.

228. முன்னைவினை - முற்பிறவியின்வினை. மறைந்தால் - (திரோதான சத்தியால்) மறைவு நேரிட்டால். அன்னை - அருட்சத்தி.

229. உற்றவெளி - சிதாகாசம். மறமாயை - கொடிய மாயை.

230. ஏடு - புறவிதழ். பங்கயம் - தாமரைபோன்ற திருமுகம். தோடு அணிந்த குண்டலம் - அழகு நிறைந்த சுந்தரவேடம்.

231. ஐயாறும் ஆறும் - முப்பத்தாறு தத்துவங்களையும். அகன்று - தாண்டி. மையிருள் - ஆணவமலம். மாள்வது - ஒடுங்குவது.

232. நன்றும்பரம் - திருவருள். தவம் - சிவஞானயோகம்.

233. நச்சு அரவு - விஷமுடைய பாம்பு. நன்மணி - மாணிக்கம். சொற் சரவை - சொற்குற்றங்களை. நல்லோர் - பெரியோர்.

234. காரணமாய் வந்து - பக்குவமாக என்னுளளே புகுந்து. பூரணமாகக் கண்டு - மிக அனுபவித்து. புகழ்ந்து - (தேவரீரைத்) தோத்தரித்து.

235. என்னை - இங்கு ஆன்மா. முன்னையோர் - பெரியோர்.

உ

சிவ சிவ

# பத்திரகிரியார்
# திருநட்சத்திர வெண்பா

—ஃ—

"ஓங்குதிரு வெண்காட்(டு) உயரடிகள் தன்னருளைப்
பாங்குபெற வேபெற்ற பத்ரகிரி - ஆங்கொளியாய்ச்
சித்திரை மாமகத்தில் சேர்ந்தனனே மாமருதூர்
அத்தன் அடியில் அமைந்து"

— தனிப்பாடல்

———

உ

சிவ சிவ

# பன்னிரு திருமுறை யாசிரியர் திருப்பெயர்

—oo—

[1] " திருஞான சம்பந்தர் [2] வாகீசர் [3] சுந்தரர்
[4] திருவாதவூரர் மற்றைத்
[5] திருமாளிகைத்தேவர் [6] சேந்தனுர் [7] கருவூரர்
தெள்ளு [8] பூந்துருத்திநம்பி
வருஞான [9] கண்டராதித்தர் [10] வேணுட்டடிகள்
வாய்ந்த [11] திருவாலியமுதர்
மருவு [12] புருடோத்தமர் [13] சேதிராயர் [14] மூலர்
மன்னு [15] திருவாலவாயார்
ஒரு [16] காரைக்காலம்மை [17] ஐயடிகள் [18] சேரமான்
ஒளிர் [19] கீரர் [20] கல்லாடர்தாம்
ஒண் [21] கபிலர் [22] பரணர்மெய்யுணர் [23] இளம்பெருமானெடு
ஓங்கும் [24] அதிராவடிகளார்
திருமேவு [25] பட்டினத்தடிகளொடு [26] நம்பியாண்
டார் நம்பி [27] சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண்டருள் செய்த
தெய்விகத் தன்மையோரே "

— தனிப்பாடல்

---

எக்காலக்கண்ணி என்னும் இந்நூல் கிடைக்குமிடம் :

திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,

வக்கீல்,

நிர்வாக ஆசிரியர், " குமரகுருபரன் "

ஸ்ரீவைகுண்டம்

(திருநெல்வேலி ஜில்லா)

செந்திலாண்டவன் துணை.

# திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவராக எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி

## அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தமிழ்க் கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத் தமிழ், அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபி விருத்திக்காகவும் பொதுமக்களின் அனுகூலத்துக்காகவும் மன முவந்து அமைத்திருக்கும் பேரறக் கட்டளைகள்.

| தொடர் எண் | தரும விவரம் | | மூலதனம் ரூபாய் |
|---|---|---|---|
| 1. | சிவஞான சித்தியார் உபந்நியாசக் கட்டளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் | ... | 15,000 |
| 2. | கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த | ... | 11,500 |
| 3. | திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு | ... | 5,000 |
| 4. | சேரமான் பெருமாள் தேவாரப்பரிசு, கொச்சி | ... | 5,000 |
| 5. | மூவர் தேவாரப் பரிசு; சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள், ஆடுதுறை | ... | 10,000 |
| 6. | ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தப் போதகாசிரியர் நியமிக்க | ... | 60,000 |
| 7. | அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க | ... | 30,000 |
| 8. | திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி நிறுவ | ... | 1,50,000 |
| 9. | இசைத் தமிழ்க் கல்விக்கு | ... | 1,00,000 |
| 10. | திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் | ... | 20,000 |
| 11. | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னதானம் வைகாசி அமரபக்ஷம் திருதியை | .. | 10,000 |

12. இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னதானம் வைகாசி அமரபக்ஷம் திருதியை ... 10,000

13. திருநள்ளாற்றில் ஆவணி மூல அன்னதானம் ... 3,000

14. ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழிமாத அன்னதானம் ... 17,000

15. திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி ... 1,00,000

16. திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப் பெறுமானம் ... 66,000

17. திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதார கட்டம் ... 2,900

18. திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச்சந்திர கட்டம் ... 3,300

19. கும்பகோணத்தில் மணிக்கூண்டு ... 25,000

20. தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை ... 28,500

21. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவுநாள் அன்னதானம் வைகாசி அமரபக்ஷம் திருதியை 9,000

22. மைசூர் மகாராஜா தேவாரப் பரிசு ... 5,000

23. தருமை ஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, மாயூரம் ... 5,000

24. சென்னை விவேகானந்தா கல்லூரியில் ராஜாஜி சைவசித்தாந்தக் கட்டளை ... 10,000

25. ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சர். எஸ். ராதா கிருஷ்ணன் சைவசித்தாந்தக் கட்டளை ... 20,000

26. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, ஸ்ரீவைகுண்டம் ... 5,000

27. மதுரைத் திருமலை நாயக்கர் தேவாரப் பரிசு ... 10,000

28. ஸ்ரீ செந்திலாண்டவன அன்னதானம் ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவிகட்கு ... 1,00,000

29. ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் ... 5,000

30. ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்—ஸ்ரீகாசி மதுரை, குடந்தை மாணவிகட்கு ... 1,50,000

| | | |
|---|---|---|
| 31. | டாக்டர் சுவாமிநாத ஐயர் நினைவுத் திருக்குறட் பரிசு, சென்னை ... | 3,500 |
| 32. | குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு ... | 1,000 |
| 33. | காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகாரநிதி ... | 3,000 |
| 34. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை ... | 10,000 |
| 35. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் ... | 4,000 |
| 36. | விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி ... | 1,000 |
| 37. | குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு ... | 3,500 |
| 38. | திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு ... | 3,500 |
| 39. | திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவு தண்ணீர்ப்பந்தல் தர்மம் ... | 3,500 |
| 40. | ஸ்ரீ வைகுண்டத்தில் படிப்பக நிதி ... | 3,500 |
| 41. | சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவுநிதி ... | 35,000 |
| 42. | சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் ... | 12,000 |
| 43. | இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் ... | 3,500 |
| 44. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நூல் நிலையக் கட்டிடம் ... | 17,825 |
| 45. | பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை ... | 5,000 |
| 46. | அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி ... | 3,500 |
| 47. | ஸ்ரீ காசி கேதாரீசுவரர் கோயிலில் ஸ்ரீ குமாரசாமி அன்னதானம் நவராத்திரி, விஜயதசமி நாட்களில் ... | 5,000 |
| 48. | ஸ்ரீவில்லிபுத்தூரில் தேவாரப் பரிசு ... | 3,500 |
| 49. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோயிலில் மின்சார தீபம்போட ... | 7,500 |
| 50. | காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு ... | 5 000 |

| | | | |
|---|---|---|---|
| 51. | திருவஞ்சைக்களத்தில் ஆடிச்சுவாதியில் சேரமான் பெருமாள்நினைவு அன்னதானம் | ... | 7,000 |
| 52. | 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் உதவி நிதி | ... | 18,500 |
| 53. | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்திற்கு நான்கு ஆண்டு மூலதனம் | ... | 28,000 |
| 54. | 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் திருச்செந்நூர் உதவி மூலதனம் | ... | 15,500 |
| 55. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் | | 15,000 |
| 56. | மாளவியாஜி பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவசித்தாந்த உபன்னியாசக் கட்டளை | ... | 5,000 |
| 57. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்—சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் | ... | 60,000 |
| 58. | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நான கட்டம் நிறுவ | ... | 2,275 |
| 59. | ஸ்ரீவைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ | ... | 45,000 |
| 60. | ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி | ... | 5,000 |
| 61. | பனசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு | ... | 5,000 |
| 62. | (6) ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த நிதிக்கு அதிகப்படியாக அளித்தது | ... | 16,000 |
| 63. | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் மதுரை முதலாண்டு உதவி மூலதனம் | ... | 7,000 |
| 64. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி மாணவிகள் ஹாஸ்டல் ஏற்படுத்த நன்செய் நிலக்கிரயம் | ... | 14,000 |

65. 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் வகையரு - திருநெல்வேலி இரண்டாண்டு உதவி மூலதனம் ... 10,000
66. 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி வகையரு - கும்பகோணம் முதலாண்டு உதவி மூலதனம் ... 7,000
67. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை ... 10,000
68. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்திற்கு அச்சகம் வாங்க நன்கொடை கட்டிடம் உள்பட ... 27,975
69. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு உபகாரச் சம்பளமளிக்க நெல்லை ஜில்லா போர்டாரிடம் ... 10,000
70. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு இடம்வாங்க நன்கொடை ... 8,000
71. ஸ்ரீ காசியில் தை மாசத்தில் இந்தியக் குடியரசு தின அன்னதானம் ... 10,000
72. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு மாணவர்கள் உணவுநிதி ... 1,50,000
73. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் மடத்திற்குப் பன்னிரு திருமுறைகள் அச்சிட நிலப்பெறுமானம் ... 50,000
74. சண்டேசுவர நாயனர் நினைவு தண்ணீர்ப்பந்தல் தருமம் திருவாப்பாடி ... 3,500
75. காஞ்சிபுரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு உபகாரச் சம்பள நிதி ... 7,000
76. திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவன் தேவாரப் பரிசு நிதி ... 5,000
77. சென்னையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு திருக்குறள் பதிப்பு நிதி ... 35,000

| | | |
|---|---|---|
| 78. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் மங்கையர்க்கரசியார் நினைவுப் பரிசு நிதி ... | 3,500 |
| 79. | கும்பகோணம் தாலூகா மேலச் சூரியமூலை கண்டியன் பழவாற்றின்மீது பாலம்கட்ட ... | 7,470 |
| 80. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தண்ணீர்ப்பந்தல் தருமநிதி ... | 3,500 |
| 81. | பழுத்த தமிழ்ப் புலவர் காசியாத்திரை நிதி செந்தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாள் ... | 5,000 |
| 82. | திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் நினைவு அன்னதானம் சித்திரைப் பரணியில்... | 7,000 |
| 83. | திருவஞ்சைக்களத்தில் ஸ்ரீ சேரமான் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் நினைவு வாசகசாலை நிறுவ ... | 5,000 |
| 84. | திருநாரையூரில் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் நினைவுத் திருமுறை நிதி ... | 35,000 |
| 85. | இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானவர் சன்மார்க்க சங்க நூல்நிலைய நிதி ... | 5,000 |
| 86. | லால்குடி ஸ்ரீ காரைக்கால் அம்மையார் நினைவு மாணவிகள் உபகாரச் சம்பள நிதி ... | 15,000 |
| 87. | அவிநாசியில் முந்நூல் அணியும் கலியாணநிதி (திருப்பனந்தாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நினைவுப் பரிசும்) ... | 5,000 |
| 88. | குடந்தையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு ... | 5,000 |
| 89. | திருப்பூந்துருத்தியில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு சித்திரைச் சதயத்தில் ... | 15,000 |
| 90. | திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தமிழ்ப் பரிசு ... | 5,000 |
| 91. | ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தர் நினைவுப் பரிசு ஸ்ரீவைகுண்டம் ... | 3,500 |
| 92. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம், இராமேசுவரம் ... | 3,500 |

| | | |
|---|---|---|
| 93. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்ன தானம், சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை (வைகாசி அமரபக்ஷம் திருதியை) ... | 5,000 |
| 94. | காசியில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு அன்னதானம் (ஆனி மகத்தில்) ... | 5,000 |
| 95. | திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் (வைகாசி அமர பக்ஷம் திருதியை) ... | 5,000 |
| 96. | திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி ... | 5,000 |
| 97. | திருநாரையூரில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுக் கட்டிடம் நிறுவ ... | 5,600 |
| 98. | திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு ... | 5,000 |
| 99. | தஞ்சை, கலைக்கூடத்திற்கு நன்கொடை ... | 5,000 |
| 100. | மணிக்குடியில் கடவூர்க்கலயர் புனற்பந்தர் நிதி | 3,500 |
| 101. | காசியில் ஸ்ரீ மாசிலாமணித் தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் நினைவு மாசி மாத அன்னதானம் | 5,000 |
| 102. | திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் நினைவுப் பரிசு ... | 5,000 |
| 103. | ஸ்ரீ காசியில் பங்குனி மாசத்தில் கமலை ஞானப் பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு ... | 50,00 |
| 104. | திருச்செந்தூரில் ஐக்கிய வேளாள சங்கப் படிப்பக நிதி ... | 5,000 |
| 105. | காசியில் சித்திரை மாசத்தில் அப்பர் நினைவு அன்னம்பாலிப்பு ... | 7,000 |
| 106. | ஆடுதுறையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி நிதி ... | 30,000 |
| 107. | செந்திலாண்டவன் திருவருள் பாலிப்பு நிதி ... | 50,000 |
| 108. | திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூஜைநிதி ... | 12,000 |
| 109. | ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு - திருச்செந்தூர் - ஸ்ரீவைகுண்டம் உயர்நிலைப் பள்ளிகளில் ... | 7,000 |

| | | |
|---|---|---|
| 110. | ஸ்ரீ காசியில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு (கார்த்திகை மாசத்தில்)... | 7,000 |
| 111. | சென்னைக் கல்லூரிகளில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவு சிவபோகசாரம் பரிசு நிதி | 5,000 |
| 112. | தஞ்சையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேமவைப்பு ... | 5,000 |
| 113. | மதுரையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேமவைப்பு ... | 5,000 |
| 114. | திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் தருமநிதி தத்துவாஞ்சேரி ... | 3,500 |
| 115. | காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு ... | 7,000 |
| 116. | திருக்காளத்தியில் கண்ணப்பர் நினைவு அன்னம்பாலிப்பு ... | 5,000 |
| 117. | ஸ்ரீ காசியில் சுந்தரர் நினைவு ஆடிமாத அன்னம் பாலிப்பு சேமவைப்பு ... | 7,000 |
| 118. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சகலகலா வல்லி மாலைப் பரிசு—அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாயூரம் ... | 1,000 |
| 119. | சிதம்பரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு ... | 5,000 |
| 120. | வெள்ளியம்பலவாண முனிவர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு—திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் ... | 3,500 |
| 121. | காசியில் ஜாபள்ளி ஜமீன்தார் அன்னம் பாலிப்பு சேமவைப்பு ... | 6,000 |
| 122. | மதுரையில் கமலை வெள்ளியம்பலவாணர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு ... | 5,000 |

---

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி.